
JESUS REDEEMS MINISTRIES
வாலிபர் உலகம்
மலர்: 12 | இதழ்: 4 | ஜுன் 2021 | ஆண்டு சந்தா ₹ 100/-
யெகோவா ஓரி
(யெகோவா ஓரி என்பதற்கு கர்த்தர் என் வெளிச்சம் என்று அர்த்தம்)
இருண்ட உன் வாழ்வில் ஒளி ஏற்றி உன்னை, வெளிச்சத்தின் வாலிபனாய் மாற்ற இயேசு உண்டு...

# INDEX


04 மறுஜீவன்

10 தீராத தாகம்

20 பாதுகாக்கிற தேவன்!

30 கிறிஸ்தவ கண்ணோட்டம்


**இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!**

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள்

**சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!**

Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

### சந்தா விவரம்

ஆண்டுக்கு 100/-
3 ஆண்டுக்கு 200/-
ஆயுள் சந்தா 1,000/-

| | | |
|---|---|---|
| A/c. Name | : | JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : | 054100710400515 |
| BANK | : | TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : | Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : | 000054 |
| IFS CODE | : | TMBL0000054 |
| MICR CODE | : | 627060021 |
| SWIFT CODE | : | TMBLINBBTUT |


**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-220022.
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in



**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ரெக்ஸ் கிளமென்ட் | ஜிஷ்யா | லீனா அவினாஷ் ரெபேக்கா | ரேச்சல் | கிளாடிஸ் | ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ்
**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா



# தலைவாசல்

அன்பான இளம் நெஞ்சங்களுக்கு
அன்பின் வாழ்த்துக்கள்!

இருண்ட கண்டமாகிய ஆப்பிரிக்காவில் ஒருவரும் கால் பதிக்க முடியவில்லை. காரணம், உலகின் மிக பெரிய சஹாரா பாலைவனம் அங்குதான் உள்ளது. மேலும் சில துறைமுகங்கள் மட்டுமே இருந்தன, நிலப்பரப்பில் பெரும்பகுதி பீட பூமிகளால் (Plateaus) ஆனது. இது கடற்கரையிலிருந்து செங்குத்தாக உயர்ந்து இருந்ததால் ஐரோப்பிய போன்ற நாட்டவரால் ஆப்பிரிக்கா கண்டத்தின் உள்ளே செல்வதற்கு கடினமாக இருந்தது. அதைத் தாண்டி கடலை சேரும் நதிகளும் நீர்வீழ்ச்சிகளாய் இருப்பதால் ஆறுகளை பயன்படுத்தி ஆப்பிரிக்கா கண்டத்திற்குள் பயணிக்க முடியாத நிலை. இதையும் தாண்டி ஆப்பிரிக்காவில் வெப்பமும், அடர்ந்த காடுகளால் ஏற்படும் ஈரப்பதமான கால சூழலும் வசிப்பதற்கு பெரும் தடையை ஏற்படுத்தியது. இப்படிப்பட்ட கடினமான நிலையிலும் எவருமே செல்ல முடியாத அந்த அடர்ந்த காடுகளாகிய இருண்ட கண்டத்திற்கு டேவிட் லிவிங்ஸ்டன் 1941ஆம் ஆண்டு கால் பதித்தார். அவரின் நுழைவிற்கு பிறகு தேவன் அந்த இருண்ட கண்டத்தில் சுவிசேஷ ஒளி ஏற்ற ஆரம்பித்தார்.



சாம்பசி ஆறு தோன்றும் இடம் போன்ற பல முக்கிய இடங்களை கண்டுபிடித்தார். மேலும் சாம்பசி ஆற்றில் மிகப்பெரிய நீர்வீழ்ச்சி ஒன்றைக் கண்டு அதற்கு விக்டோரியா நீர்வீழ்ச்சி என்று பெயரிட்டார். அதேபோல் மத்திய ஆப்பிரிக்காவையும், கிழக்கு ஆப்பிரிக்காவையும் ஆராய்வதற்காகச் சென்றார். அப்பொழுது அரபியர்கள் ஆப்பிரிக்கர்களை அடிமைகளாக விற்பனை செய்யக் கடத்திச் செல்வதைக் கண்டார். இக்கொடிய முறையை ஒழிக்க இவர் அரும் பாடுபட்டார். இப்படி ஆப்பிரிக்கா மக்களுக்காக பல சேவை செய்து பின்னர் சுவிசேஷ ஒளியை ஏற்றி, அவர்களின் இருண்ட வாழ்வில் இயேசு என்னும் வெளிச்சத்தைக் கொடுத்தார்.



*இதை வாசிக்கிற வாலிபனாகிய நீ,*
*உன் சொந்த தேசத்திற்கு என்ன செய்கிறாய்? என்பதை யோசி,*

இந்தியாவை இன்னும் பாவம், சாபம், வறுமை, மேலும் தற்போதைய வாதை என்னும் கொரோனா கொள்ளை நோய் போன்ற பல இருள் சூழ்ந்திருக்க, சுவிசேஷத்தின் எழுப்புதலை, தாய் நாட்டிற்கு கொடுக்க உன் பங்கு என்ன? இந்த வாதைக்கு பிறகு தேவன் ஒரு மகா பெரிய எழுப்புதலை நியமித்துள்ளார். அதற்கு உன் ஆயத்தம் என்ன? சுவிசேஷ வெளிச்சத்தை பரவ செய்ய உன் தரிசனமும், பங்கும் தான் என்ன?



காத்திருந்தது போதும், ஆத்துமாக்களைக் கொள்ளை நோய்க்கு வாரிக் கொடுத்தது போதும். நீ எழும்பினால் ஆத்துமாக்களை பரலோகத்திற்கு கொள்ளை பொருளாய் கொண்டு போகலாம்! ●

*வெளிச்சத்தின் வாலிபனாய்*
*ஒளி வீச புறப்படு...*

கிறிஸ்துவின் பணியில்
*அவினாஷ்*

சாட்சி: ஜிஷ்யா

# மறுஜீவன்...



சகோதரி: ஜெனிதா ஸ்டெபி

துள்ளிகுதித்து ஓடியாட வேண்டிய இளம் வாலிப வயதில் கொரூர வியாதியினிமித்தம் மருத்துவர்களால் கைவிடப்பட்ட சூழ்நிலையில், அவர்களுடைய சிறிய ஜெபத்தை கேட்டு மறுஜீவன் பெற்றுக் கொண்ட சகோதரி ஜெனிதா ஸ்டெபி அவர்கள் வாழ்க்கையில் நடந்தவற்றை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

*உங்களது சிறுபிராயம் மற்றும் குடும்பத்தைப் பற்றி சொல்லுங்களேன்?*

நான் தூத்துகுடி மாவட்டம் நாசரேத் ஊரில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன். எனது தாயார் அரசு பள்ளியில் தலைமை ஆசிரியராகவும், அப்பா பிசினஸ் செய்து கொண்டு இருக்கிறார்கள். எனக்கு ஜெரின் என்ற தம்பி இருக்கிறான். என் சிறுவயதில் தாயாரின் கட்டாயத்தினால் வேதம் வாசித்து ஜெபித்தேன். மற்றபடி சிறுவயதில் ஆண்டவருக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. என்னுடைய தாயார் தலைமையாசிரியராக இருந்ததால் எங்களுடைய படிப்பு விஷயத்தில் மிகவும் கண்டிப்புடன் நடந்துக் கொள்வார்கள். எனவே அவர்களுக்கு பயந்து சிறுவயதிலிருந்தே நன்றாகப் படிப்பேன். +2வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற்றேன்.



ஜெனியின் பெற்றோர்

*சரி... சிறுவயதில் அம்மாவின் கட்டாயத்தினால் செய்தீர்கள்... உங்கள் இளம் வாலிப பருவத்தில் எப்படி இருந்தீர்கள்?*

நான் 2010ஆம் ஆண்டு UG படித்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று ஒருநாள் இருமல் வந்தது. அதன்பிறகு இரத்த வாந்தி எடுக்க ஆரம்பித்தேன். வீடு முழுவதும் இரத்தமாக மாறியது. உடனே பக்கத்திலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு எனக்கு இரத்தத்தை நிறுத்துவதற்கு ஊசி போட்டார்கள். ஆனால் டாக்டருக்கு இது எதினால் வந்தது என்று சொல்ல முடியவில்லை. டாக்டர்கள் எல்லாரும் திகைத்துப் போய் இருந்தார்கள் தொடர்ந்து வாந்தி வந்து கொண்டிருந்ததால் என்னால் உட்கார முடியவில்லை. அங்கு தேவையான இரத்தம் இல்லாததால், திருநெல்வேலி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.



*சிறுவயதிலேயே இவ்வளவு பெரிய பிரச்சனை... சரி அந்த மருத்துவமனைக்கு சென்றதும் சுகம் கிடைத்ததா?*

இல்லை... ஆக்ஸிஜன் அளவு குறைந்த நிலையில் தான் என்னை கொண்டு போனார்கள். என்னை சுற்றிலும் இருந்தவர்கள் அழுகிறார்கள் என்று தெரியும், மற்றபடி எனக்கு எந்த உணர்ச்சியும் இல்லை. அந்த நேரத்தில் என் அம்மாவிடம், எனக்கு ஏதோ ஆக போகிறது, எல்லாரும் வந்து என்னை பார்த்து விட்டு போகச் சொல்லுங்கள் என்று சொன்னேன். என் அம்மா எனக்காக ஜெபம் பண்ணிக் கொண்டேயிருந்தார்கள். திருநெல்வேலி மருத்துவமனைக்கு கொண்டு போய் தினமும் ஒவ்வொரு பரிசோதனையாக எடுத்தார்கள், என்னை ஸ்டச்சரில் வைத்து தான் கொண்டு போனார்கள். அப்போதுகூட

என்னால் எழும்பி உட்கார முடியவில்லை. நிறைய மாத்திரைகள், ஊசிகள் போட்டாலும் எந்த ஒரு மாற்றமும் இல்லை. என்ன வியாதி என்று தெரியவில்லை. நிறைய டாக்டர்களும் கலந்து பேசி, நீங்கள் சென்னைக்குப் போங்கள் என்று சொல்லி விட்டார்கள்.

*ஒகே... சென்னை மருத்துவமனைக்கு சென்றீர்களா? எப்படி சுகம் கிடைத்தது?*

என்னை சென்னைக்கு அழைத்து செல்லவில்லை, மாறாக குடும்பமாக என் பிரச்சனையை சொல்லி ஜெபித்தார்கள். நான் அப்போது படுக்கையில் இருந்து கொண்டே, இரத்தம் சுத்தமாக எனக்கு இல்லை, இரத்தம் எனக்கு மிகவும் குறைவாக ஆகிவிட்டது, எனக்காக சிலுவையில் நீங்கள் இரத்தம் சிந்தினீர்கள், அந்த இரத்தத்தை கொடுத்து எனக்கு மறு ஜீவனை கொடுத்தால், நான் உங்களுக்கு சாட்சியாக இருப்பேன் என்று ஜெபித்தேன். ரொம்ப நாட்களுக்கு பிறகு அன்றைக்கு இரவு நன்றாகத் தூங்கினேன். அடுத்த நாள் இரத்தம் எடுத்து பரிசோதித்து பார்க்கும் போது இரத்தத்தின் அளவு 6-ல் இருந்து 11 ஆக உயர்ந்துவிட்டது. ஆனால் டாக்டரிடம் பரிசோதிக்கும் போது நுரையீரல் 80% செயல் படவில்லை, எப்படி Survive பண்ணுகிறீர்கள் என்று கேட்டார். உணவுக் கட்டுபாடுகளுடன் வாழ்க்கை முழுவதும் மாத்திரை எடுக்க வேண்டும் என்று சொல்லி விட்டார்கள். தினமும் 10-15 மாத்திரைகள் சாப்பிட சொன்னார்கள். என்னுடைய பெற்றோர் இதைக் கேட்டதும் இடிந்து போனார்கள். என்னுடைய தாயார் நம்பிக்கை இழக்காமல் இரவும் பகலும் ஜெபித்துக் கொண்டு இருந்தார்கள். அந்த சமயத்தில் தான் 2010ஆம் ஆண்டு மே மாதம் நாலுமாவடியில் நடைபெற்ற சேனை முகாமிற்கு நானும் நண்பர்களுமாக கலந்து கொண்டோம். அம்மாவும் தைரியமாக அனுப்பி வைத்தார்கள். மாத்திரைகள் எல்லாம் எடுத்து கொண்டு தான் முகாமிற்கு வந்தேன். அந்த கூடுகையின் ஜெப வேளையில் இயேசப்பா! என்னை உங்களுக்கு பிடிக்கும் என்றதால் தான் எனக்கு ஜீவனைக் கொடுத்து அழைத்து வந்திருக்கிறீர், என் பெயரைச் சொல்லி கூப்பிட வேண்டும் என்று ஜெபம் பண்ணினேன், ஆனால் அன்றைக்கு என் பெயர் சொல்லி அழைக்கவில்லை. மதிய வேளையில் ஆண்டவர் உன்னுடைய முகத்தை என்னிடம் காட்டுகிறார், உன்னுடைய வாழ்க்கையில் நிறைய பிரச்சனை வந்திருக்கிறது, அதெல்லாம் ஒன்றுமே இல்லை, இனி ஆண்டவருக்காக நீ சாட்சியாக நிற்க போகிறாய், எல்லோருக்கும் முன்பாகவும் ஆண்டவர் உன்னை மேன்மையாக வைக்க போகிறார் கர்த்தர் உன்கூடவே இருந்து வழிநடத்தப் போகிறார் என்று ஊழியக்காரர் மூலமாக தேவன் என்னோடு பேசினார்.





முகாம் முடிந்ததும் திரும்பவும் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். மறுபடியும் பரிசோதனை செய்து பார்த்த போது மருத்துவர்கள் அது எப்படி ஆகும் என்று அதிர்ச்சியடைந்து விட்டார்கள். Normal human being Lungs Function எப்படி இருக்குமோ அப்படி தான் உங்களது Lungs இருக்கிறது என்று சொன்னார்கள். இனி எந்த மாத்திரையும் வேண்டாம், எல்லா உணவும் சாப்பிடலாம், இது மெடிக்கல் மிராக்கிள் என்று சொன்னார்கள். எல்லாராலும் கைவிடப்பட்ட நிலைமையில் இயேசப்பா என்கூட இருந்து, இமைபொழுது உன்னை கைவிட்டேன், ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைசேர்த்து கொண்டேன் என்ற வார்த்தையின்படி எனக்கு மறுஜீவனைக் கொடுத்து இன்றைக்கு வரைக்கும் நடத்தி வருகிறார்.

*சரி... ஒரு வழியாக மறுஜீவனை பெற்றீர்கள்... UG படிப்பை தொடர்ந்துப் படித்தீர்களா?*

ஆம், தொடர்ந்து படித்தேன். அந்த செமஸ்டர் கல்லூரிக்குப் போகவில்லை, ஆனால் இயேசப்பா என்கூட இருந்து எந்த அரியர்சும் இல்லாமல் வெற்றி பெற செய்து, BE படிப்பை First class-ல் முடிக்க கிருபை செய்தார். TANCET-ல் நல்ல மார்க் கொடுத்து மேற்படிப்பு M.Tech, MIT Anna University-ல் First class with distinction எடுக்க கர்த்தர் உதவி செய்தார். கிரகிக்க முடியாத அதிசயங்களை செய்வேன் என்கிற வார்த்தையின்படி நான் நினைத்ததை விட கர்த்தர் என் படிப்பை ஆசீர்வதித்தார்.



*ஓ... நல்ல மதிப்பெண் பெற்று PG முடிக்க கிருபை செய்தார்... அதன்பிறகு ஏதாவது படித்தீர்களா?*

இல்லை, என் பெற்றோர் வரன் பார்த்து திருமணம் செய்து வைக்க தீர்மானித்தார்கள். கர்த்தர் எனக்கு 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் திருமண வாழ்க்கை ஏற்படுத்தி கொடுத்தார். என்னுடைய கணவர் Dr. Jackins கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றி வருகிறார். திருமண வாழ்க்கைக்கு பின்பு எல்லா விதத்திலும் எனக்கு ஆதரவாக இருந்து கர்த்தருடைய காரியங்களை செய்ய துணை நிற்கிறார். SBI-ல் வேலை கிடைத்த போதும் என்னுடைய அழைப்பை அறிந்து கொண்டு உலக வேலைக்கு அனுப்பவில்லை. கர்த்தர் வாக்கு கொடுத்தப்படி Jessica Santina, Juan Samuel என்ற இரண்டு கர்ப்பத்தின் கனிகளைக் கொடுத்து ஆசீர்வதித்திருக்கிறார். 2018ஆம் ஆண்டு கர்த்தர் சொந்த வீட்டையும் கட்டி கொடுத்து நிறைவாய் ஆசீர்வதித்திருக்கிறார். என்னுடைய மாமாவும் அத்தையும் தலைமையாசிரியர்களாக இருந்து பணி ஓய்வு பெற்று கர்த்தருக்காக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களும் எனக்கு எல்லாவிதத்திலும் உதவியாக இருக்க கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். இன்று கர்த்தர் அவருக்கென்று குடும்பமாக எங்களை பயன்படுத்தி வருகிறார்.



ஜெனி தன் கணவர் குழந்தைகளுடன்

*சூப்பர்... திருமணம் முடிந்தது, இரண்டு குழந்தைக்கு தாயான உங்களுக்கு அதன்பிறகு அந்தப் பிரச்சனை வந்ததா?*

இல்லை, 11 வருடங்களாக எந்தப் பிரச்சனையும் இல்லை. எந்த மருந்தும் நான் எடுக்கவில்லை. என்னுடைய எல்லா பணிகளையும் செய்வதற்கு கர்த்தர் பெலன் கொடுத்து இன்றைக்கு வரைக்கும் நடத்தி வருகிறார்.

*வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

நண்பர்களே! சோர்ந்து போகாதீர்கள், என்னுடைய வாழ்க்கையே முடிந்தது என்ற நிலையில் இருந்த போது, என் சிறு ஜெபத்தைக் கேட்டு, எனக்கு அவருடைய இரத்தத்தையும், ஜீவனையும் கொடுத்து இன்றைக்கு உயிருள்ள சாட்சியாக வைத்திருக்கிறார்... தீங்கின் காலத்திலும் நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்பட்டு, உனக்குச் சகாயஞ் செய்வேன் (எரேமியா 15:11) என்ற வார்த்தையின்படி அவர் சகாயம் செய்வார். கர்த்தர் மேல் நம்பிக்கை யாயிருங்கள்! அவர் உங்களுடைய எல்லா காரியங் களிலும் ஜெயம் கொடுப்பார். அவரால் கூடாத காரியம் ஒன்று மில்லை என்பதை விசுவாசியுங்கள். தகுதியில்லாத என்னை தெரிந்து கொண்டு ஜீவனைக் கொடுத்து ஆசீர்வதித்த தேவன் உங்களையும் நிச்சயமாக ஆசீர்வதிப்பார்.



ஜெனி தன் கணவரின் பெற்றோருடன்

**அன்பான வாலிபர்களே! சிறுவயதில் மருத்துவர்களால் கைவிடப்பட்ட சூழ்நிலையிலும் கர்த்தர் அவர்களுக்கு தன் இரத்தத்தையும், மறுஜீவனையும் கொடுத்து இன்றைக்கு உயிருள்ள சாட்சியாக நிறுத்த முடியுமானால், இன்றைக்கும் இதேபோல் நீங்களும் கைவிடப்பட்ட சூழ்நிலையில் காணப்பட்டால் ஜீவனை கொடுக்க இயேசுவிடம் மன்றாடுங்கள். ஜீவனுள்ள தேவன் உங்களுக்கும் மறுஜீவனை கொடுத்து ஆசீர்வதிப்பார் ●**

# வேதாகம புதையல் வேட்டை

வேதாகம புதையல் வேட்டையில் பங்குபெறும் ஒரு நபருக்கு குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.

**கீழே வேதத்திலுள்ள எதிர்மறை சொற்களால் நிறைந்த வசனத்திலிருந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. எதிர்மறை சொற்களைக் கண்டறிந்து, சரியான விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**

1. அதின் மயிரை ------- × ------- உன்னால் கூடாதே.

2. இப்படி நீ -------------- × ------- வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன்.

3. ------ வரும்போது × ------ ஒழிந்துபோம்....!

4. ------- × ------- ஊழியம் செய்ய உங்களால் கூடாது.

5. உமக்கு ------- × ------- சரி.

6. ------- வெறுத்து, × ------- பற்றிக் கொண்டிருங்கள்.

7. பாருங்கள் ------- × எவ்வளவு ------- கொளுத்தி விடுகிறது.

8. ------ வார்த்தைகளைப் பொழிகிறது × ------ அறிவைத் தெரிவிக்கிறது.

9. ஒருவனும் ------- × வஸ்திரத்துண்டை-------------- வஸ்திரத்தின்மேல் போட்டு இணைக்க மாட்டான்.

10. ------- × ------- ஒருவரையொருவர் சந்திக்கிறார்கள்; அவர்கள் அனைவரையும் உண்டாக்கினவர் கர்த்தர்.

**கடந்த மாத விடைகள்**

1 (1 இராஜா. 17:1-6)
2 (ஆதி. 22:16-18)
3 (எண். 14:24)
4 (ஆதி. 6:7)
5 (யோசுவா 11:15,16)
6 (2 இராஜா. 18:1, 5-7)
7 (2 நாளா. 17:3-5)
8 (2 நாளா. 24:15,16)
9 (2 நாளா. 22:18-23)
10 (2 நாளா. 14:1-7)

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.06.2021**

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 220022.
youth@jesusredeems.org



முகப்பு செய்தி: சதீஷ்



# வெளிச்சம்



கடந்த ஆண்டு மார்ச் மாதம் உண்டான கொரோனாவால் எங்கு பார்த்தாலும் தீவிர பரிசோதனை, சிகிச்சை, தனி மனித பாதுகாப்பு ஏற்பாடுகள், ஊரடங்கு என்று 2020 முழுவதும் இப்படியே கடந்து வந்தோம். பலதளர்வுகள் இருந்தாலும் மீண்டும் புது நம்பிக்கையுடன் 2021ஆம் ஆண்டை தொடங்கிய கொஞ்ச நாட்களில் கொரோனா இரண்டாவது அலையால் மீண்டும் நம் வாழ்க்கை, படிப்பு, எதிர்காலம் எல்லாம் முடங்கி இருள் சூழ்ந்து விடுமோ என்ற பயத்துடனும் கவலையுடனும் இருக்கிறீர்களா? பயப்படாதீர்கள்! கர்த்தர் உங்கள் இருளை வெளிச்சமாக மாற்றுவார்.

ஒரு அஞ்சல் பெட்டியில் அவருடைய உருவப்படத்தை மட்டும் வரைந்து போட்டால் போதும். அது நியூ ஜெர்சியில் மென்லோ பார்க்கிலுள்ள அவருக்கு சென்று சேர்ந்து விடும். இப்படி ஒரு வேடிக்கையான பேச்சு அந்தக் காலத்தில் நியூயார்க் சிட்டியிலுள்ள மக்கள் மத்தியில் இருந்தது. இப்படி மக்களால் கொண்டாடப்பட்ட மகத்தான விஞ்ஞானியாக திகழ்ந்தவர் தான் தாமஸ் ஆல்வா எடிசன்.

மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்தாலும் அதனைக் கொண்டு ஒளியூட்டக் கூடிய வழிமுறைகளுக்கு அறிவியல் உலகம் பெரும் முயற்சி செய்து கொண்டு இருந்த காலத்தில் எடிசனின் பங்கு முக்கியமாக இருந்தது. எடிசன் வாழ்ந்த காலத்தில் வீதிகளில் Gas Lamp-தான் பயன்படுத்தப்பட்டது. 50 ஆண்டுகளுக்கு மேலாக "மின்சார விளக்கு" என்பது பலருக்கு எட்டா கனியாக இருந்தது. அக்காலத்தில் தான் வசித்து வந்த நியூயார்க் சிட்டியின் வீடுகளிலும், வீதிகளிலும் மின்சார விளக்குகள் எரிய வேண்டும் என்பது எடிசனின் ஆசை மற்றும் லட்சியமாக இருந்தது. ஆனால் கேஸ் மற்றும் எண்ணெய் விளக்குகள் மட்டுமே பயன்படுத்தி வந்த காலத்தில் அவரது ஆசை நிறைவேறும் என்று எடிசனை தவிர மற்றவர்கள் யாரும் நம்பவில்லை. ஆனால் 1879ஆம் ஆண்டு 40 மணி நேரம் தொடர்ந்து எரியக்கூடிய மின் விளக்கை எடிசன் உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.



உலகிலேயே மின்மயமாக்கப்பட்ட முதல் நகரமாக நியூயார்க் சிட்டி மாறினது. ஒரு தனி மனிதனின் முயற்சி, உழைப்பு, நம்பிக்கையால் இருளில் இருந்த நகரம் வெளிச்சத்தைக் கண்டது. தனி மனிதனால் இருள் நிறைந்த உலகத்திற்கு வெளிச்சத்தை கொண்டு வர முடியுமானால், வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தரால் இருள் சூழ்ந்த உங்கள் வாழ்க்கையை

வெளிச்சமாக மாற்ற முடியும் என்று விசுவாசியுங்கள். இருள் இந்த உலகம் படைக்கப்பட்ட போது இருந்தது. ஆனால் "**தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று**" **(ஆதி.1:3).** உலகம் சிருஷ்டிக் கப்பட்ட போதே இருளிலிருந்து வெளிச்சத்தை பிரித்த தேவன், தாம் படைத்த மக்கள் வெளிச்சத்தில் வாழ வேண்டும் என்றும்,



உலகிற்கு வெளிச்சமாக இருக்க வேண்டும் என்றும் விரும்பினார். வெளிச்சத்தின் பிள்ளைகளாகிய நீங்கள் எந்தவொரு பாவ இருளுக்குள்ளும் சிக்கிக் கொள்ளாதபடி எச்சரிக்கையாக இருங்கள். உங்களைப் போன்று யோசேப்புக்கும் அவருடைய வாழ்க்கையில் கனவுகளும், தரிசனங்களும் இருந்தது. ஆனால் நிஜ வாழ்வில் சகோதரர்களின் சூழ்ச்சி, எகிப்துக்கு அடிமையாக கொண்டு போகப்படுதல், போத்திபார் மனைவியின் வஞ்சகப் பேச்சுகள், சிறைச்சாலை அனுபவம் என்று எல்லாமே அவர் கண்ட கனவுக்கு நேர் எதிர்மறையாக இருந்தது. எங்கும் இருள் சூழ்ந்த நிலமை காணப்பட்டது. இவை எல்லாவற்றையும் பார்த்து யோசேப்பு சோர்ந்து போகவுமில்லை, தன்னுடைய எதிர்காலத்தைக் குறித்து கலங்கவு மில்லை, பயப்படவுமில்லை. காரணம், "**கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்?...**" **(சங். 27:1)** என்ற விசுவாசமே இருளிலிருந்து அவரை வெளிச்சத்திற்கு கொண்டு போனது. எகிப்தில் அடிமையாக இருந்த யோசேப்பு தன் எதிர்காலத்தைக் குறித்து கலங்காமல் கர்த்தரை விசுவாசித்தபடியால் அவர் அவரை முழு எகிப்துக்கும் அதிகாரியாக்கி அவருடைய இருளான வாழ்வை வெளிச்சமாக மாற்றினார். இதுமட்டுமின்றி, "**எகிப்து தேசமெங்கும் பஞ்சம் உண்டானபோது, ஜனங்கள் உணவுக்காகப் பார்வோனை நோக்கி: ஓலமிட்டார்கள்...**" **(ஆதி. 41:55).** தேசமெங்கும் ஜனங்களுக்குள் சஞ்சலமும் தவிப்பும் உண்டாயிற்று. எகிப்து தேசம் முழுவதும் இருள் சூழ்ந்த நிலைமை காணப்பட்டது. இந்த சூழ்நிலையில் தான் கர்த்தர் யோசேப்பை தன் ஞானத்தின் ஆவியால் நிரப்பி எகிப்தின் பஞ்ச இருள் நீங்கும் வெளிச்சமாக பயன்படுத்தினார். "**நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்...**" **(மத். 5:14)** என்ற வார்த்தையின் படி யோசேப்பு பஞ்சகாலத்தில் அவனுடைய குடும்பத்திற்கும் எகிப்து தேசத்திற்கும் வெளிச்சமாக இருந்தார்.



எனக்கன்பான வாலிப தம்பி, தங்கச்சி! இன்று நீங்களும் என் வாழ்க்கை இருள் சூழ்ந்த நிலமையில் உள்ளது. எதிர்கால படிப்பு, வேலை, குடும்ப வாழ்க்கை என்று எதிலுமே என்னால் வெற்றி பெற முடியவில்லை, நான் எதை செய்தாலும் அது தோல்வியாய் முடிகிறது என்று சோர்ந்து போய் இருக்கிறீர்களா? கலங்காதீர்கள்! நீங்கள் இயேசுவை விசுவாசிக்கும்போது அவருடைய ஒளி உங்களில் பிரகாசிக்கும். "**நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது**" **(சங்.97:11)** என்று வேதம் கூறுகிறது. ஒருவேளை உங்கள் வாழ்க்கையில் தனிமை, பயம், தோல்வி போன்ற எவ்வித பிரச்சனைகளை நீங்கள் கடந்து சென்றாலும் கர்த்தர் உங்களுக்கு வெளிச்சமாயிருப்பார். தேவ ஒளி உங்களில் பிரகாசிக்கும். யோசேப்பு எப்படி அவருடைய குடும்பத்திற்கும், தேசத்திற்கும் வெளிச்சமாக இருந்தாரோ, அதுபோலவே நீங்களும் உங்கள் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் வெளிச்சமாக இருக்க முடியும். "**...நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்**" **(யோவான் 8:12).** நீங்கள் தொடர்ந்து இயேசுவை பின்பற்றி செல்லுங்கள். அவர் உங்கள் வாழ் விலுள்ள எல்லா இருளையும் வெளிச்சமாக மாற்றுவார் ●

ஆலோசனை: அவி

Heart Beat



# தீராத தாகம்

நான் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்து கல்லூரியில் சேருவதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். என் பெற்றோர் மிகுந்த எதிர்பார்ப்புடன் உள்ளனர். என் குடும்பத்தின் முதல் பட்டதாரி நான் தான் என்ற கனவுடனும், ஆசையுடனும் இருந்தேன். ஆனால் தற்பொழுது ஊரடங்கு என்ற செய்தி வந்ததும் மிகவும் சோர்ந்து போனேன். கல்லூரி படிப்பைப் படிக்க முடியாமல் போய்விடுமோ என்ற ஒரு பயமும் கலக்கமும் எனக்குள் இருக்கிறது. மேலும் ஆன்லைன் வகுப்புகளில் படித்து நல்ல மதிப்பெண் எடுப்பது கொஞ்சம் கஷ்டம் என்று எல்லோரும் சொல்வதால் எனக்குள் மனசோர்வும் வந்தது. நான் படித்து முடித்து ஒரு பெரிய அதிகாரியாகி, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதே என்னுடைய இலட்சியம். ஆனால் ஊரடங்கு என்பதால் கல்லூரிக்குச் சென்று படிக்க முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளது. என்னுடைய இலக்கை அடைய முடியுமா? என் குடும்பத்தின் நிலை மாறுமா? என்ற கேள்விக்குறியுடன் இருக்கிறேன். நான் என்ன செய்வது? – **சாந்தி, கரூர்.**

அன்பு தங்கை சாந்தி, உங்களின் கடிதம் படிப்பதற்கு சற்று வேதனையாகவும், வருத்த மாகவும்தான் இருந்தது. சாந்தி, இன்றைய சூழலில் பாடபுத்தகத்தை மூட்டைக் கட்டி வைத்து விட்டு, சந்தோஷமாக இருக்கலாம் என்று சொல்லும் மாணவர்கள் மத்தியில், உங்களைப் போன்ற தரிசனமிக்க சில தங்கைகளை பார்க்கும்போது இன்னும் இந்தியாவிற்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்பதை நன்கு அறிய முடிகிறது. சாந்தி, உங்கள் பட்டப்படிப்பு என்னும் கனவும், உயர் அதிகாரியாக வேண்டும் என்ற தரிசனமும், ஊரடங்கினால் முடங்கி விடுமோ என்ற அச்சமும், வருத்தமும் வேண்டாம். நிச்சயம் உங்களின் கனவு நினைவாக வாய்ப்பு உண்டு, நீங்களும் ஒரு சிறந்த அதிகாரியாக வந்து, மக்களுக்கு நன்மை செய்யலாம்.




ஆனால் அதற்கு மிகுந்த தாகமும், மாறாத மனநிலையும் தேவை. இவை இரண்டும் இருக்குமானால் எப்பேர்ப்பட்ட தடைகள், தாமதங்கள் வந்தாலும் உங்களின் இலக்கை தடுக்க முடியாது. சாந்தி, நீங்கள் செய்ய வேண்டிய Home workயை சரியாக செய்ய வேண்டும். முதலில் உங்கள் கல்லூரியில் ஆன்லைன் வகுப்பு வசதி உள்ளதா? வகுப்பு எப்பொழுது ஆரம்பிக்கிறார்கள்? என்பதை தெரிந்து கொண்டு அந்த வகுப்புகளில் உங்களின் முழு சிந்தையையும், கவனத்தையும்

செலுத்த வேண்டும், மேலும் மற்றவர்கள் சொல்லும் கருத்தைக் கேட்டு தேவையில்லாத பயங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். அதே நேரம் தடைகளையும், பிரச்சனைகளையும் கண்டு சோர்ந்து போகும் நிலை யிலிருந்து மீண்டு, எதையும் போராடி முயற்சி செய்து சாதிக்க வேண்டும் என்ற எண்ணங்களுக்கு உங்களை பழக்கப்படுத்துங்கள். இந்த ஆன்லைன் வகுப்பு கலாச்சாரம் மேலை நாடுகளில் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே வந்துவிட்டது. அதனால் அவர்களுக்கு இந்த ஊரடங்கு ஆன்லைன் வகுப்பு ஒரு பொருட்டே இல்லை. நம்முடைய நாட்டிலும் ஒரு சில மாநிலங்களில் இந்த ஆன்லைன் வகுப்புகள் சகஜமான ஒன்றாகி விட்டது. தமிழ்நாட்டைப் போன்ற ஒருசில மாநிலங்களிலும், ஒருசில மாநகரங்களிலும், ஒருசில கிராமங்களிலும் தான் ஆன்லைன் வகுப்பு கடினமான ஒன்றாக இருக்கிறது.

### *சாந்தி நீங்கள் உங்கள் இலக்கை அடைய சில வழிகள்:*

- முதலில் நான் ஒரு அதிகாரியாக மாறுவேன் என்ற தாகமும், மாறாத மனநிறையும் எப்பொழுதும் உங்களுக்குள் இருக்க வேண்டும். என்னால் ஆன்லைன் வகுப்பு மூலமாகவும் படித்து வெற்றிபெற முடியும் என்ற மனநிலை, கல்லூரி படிப்பை முடிக்கும் வரை இருக்க வேண்டும்

- எந்த காலகட்டத்திற்கும் ஏற்றவாறு, தங்களை வடிவமைத்து கொள்ளும் ஆற்றல் உள்ளவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். உதாரணமாக இந்திய எல்லைப் பணியில் இருக்கும் வீரர்கள், ஹிமாச்சலம், காஷ்மீர் போன்ற பகுதியில் Minus Degree குளிரிலும், அதிமான வெப்பமான நேரங்களிலும், கொளுத்தும் வெயிலிலும் தங்களுடைய ஆயுதங் களையும், பாதுகாப்பு இயந்திரங்களையும் சுமந்துகொண்டு நிற்கும் ஒரு இந்திய ராணுவ வீரரின் அர்ப்பணிப்புக்கு முன்பாக நம்முடைய அன்றாட பணிகளும், பிரச்சனைகளும் ஒன்றும் இல்லை.



- மேலும் கல்லூரி படிப்பு போக, மேற்கொண்டு என்ன படித்தால் உங்களை மேன்மேலும் தகுதிபடுத்திக் கொள்ளலாம் என்று ஆலோசித்து அவற்றை படிக்க முயலுங்கள்.



- நேரடியாக பாடம் படிப்பதற்கும், ஆன்லைன் மூலம் பாடம் படிப்பதற்கும் வித்தியாசம் உண்டு. அதே நேரம் சில சிரமங்களும் உண்டு. ஆனால் வீட்டில், பாதுகாப்பான இடத்தில் இருந்து கொண்டே உங்கள் படிப்பை தொடர்கிறோம் என்று உங்கள் மனதை பக்குவப்படுத்திக் கொண்டு செயல்படுங்கள்.

### *தவிர்க்க வேண்டியவை:*

- தேவையில்லாமல் எந்த Social media platformல் சென்று நேரத்தை வீணடிக்க வேண்டாம். தேவையான செய்திகளுக்கு மட்டுமே Social mediaவை பயன்படுத்தவும். ஒருவேளை ஆன்லைன் வகுப்பு Attend செய்து சோர்வு வந்தாலும், நீங்களே சில காரியங்களை செய்து உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். (Music Instrument வாசிக்கலாம், walking போகலாம் சில செய்திகளைப் பார்க்கலாம்). உங்களுடைய பொழுதுபோக்கிற்காக தவறான வலைத்தளங்களில் சென்று சிக்கிக் கொள்ள வேண்டாம்.

- மற்றவர்களைப் போல ஆன்லைன் வகுப்புகளில் நிர்விசாரமாக இருக்க வேண்டாம். எப்பொழுதும் கல்லூரிக்கு செல்வதுபோல, உங்களை நீங்களே ஆயத்தப்படுத்தி, புத்துணர்வுடன் இருக்க முயலுங்கள். இல்லையென்றால் ஆன் லைன் வகுப்பு முற்றிலும் wasteஆன நேரமாக மாறும்.

***சாந்தி, இப்படி நீங்கள சீராக முயற்சித்து செயல் படும்போது உங்கள் கனவு நினைவாக மாறும்***

*All the best!* ●

# Revival IGNITERS

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல்கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் சினெர்ஜியா கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

**Refresh Revive Recharge**

## EVERY 1ST SUNDAY (6th June)

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center, Ajantha Mahal, No.3,6th West Cross Road, Gandhi Nagar.
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:62 2nd Floor, Benny Kumaran Main Road.
9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall, West Church.
9985033401 | 9442885315

## EVERY 2ND SATURDAY (12th June)

**MADURAI (4:30 - 6:30PM)**
Gethsamane Prayer Centre 2/56, Upstairs, 1st Street, Main Road, Subramaniya Puram.
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY (13th June)

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School, Opp Rly. Station.
9597927799 / 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9488475315

**VILLUPURAM (3 - 6PM)**
Jesus Redeems Office Dhanalakshmi Garden Behind Lakshmi Hospital Villupuram .
8344411022 | 9442885315

**KOVILPATTI (3PM – 6 PM)**
St. Paul's Matriculation School, Kovilpatti.
9750955548 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building R.A. Nursing Institute SCV Computers (top floor) Main Road, Alangulam, Near Union Office Opposite.
9965377427 / 9750955548

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor.
9750955548 | 9976766422

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School, Surandai.
9443962141 | 9750955548

## EVERY 3RD SUNDAY (20th June)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center Shah Complex No: 43/R4, Rajendra Nagar Trivandrum Road.
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center, No:90,1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore.
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center 22A, Ist Floor, Thennur High Rd., Near KMC Bus Stop, Thennur, 9488475315

**JEBAMALAI (2PM)**
Kadaiyam (via), Keelamathapuram, (TirunelveliDist).
8300131000 | 9750955548

**MUMBAI (5PM - 8PM)**
Gethsamane Prayer Centre, Bethel, Plot 305/E, Mith ChowkyMarve Road Malad -W. 9004882470 | 9664050567

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road. 9488475315

**DINDIGUL (3PM - 5:30 PM)**
CSI Sophia School, (Opp: Govt Hospital) Dindugal.
9750955548 | 6383015262

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center,1A/25B, Bypass Road (Opp Arasu Autos)
9976766322 | 7373374733

**TIRUVANNAMALAI (3:30 PM)**
A L C Lebanon compound, Near Vijaya Mall, Bye pass Road Corner.
9791444788 | 9865553420

**RANIPET (3 - 6P.M.)**
Gethsemane Prayer Centre, MBT Road, Navalpur
9500283179 / 9442885315

## EVERY 4TH SATURDAY (26th June)

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre M K Complex 71, Venkatesapuram Near Bank Of Baroda, Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY (27th June)

PERNAMBUT (3 PM- 6 PM)
Revival Prayer Tower, V. Kotta Road, Pernambut, Vellore Dist.
9940854125 | 9442885315

**ERODE (4 PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:216, Ist Floor Near Fire Service, Gandhiji Road, Erode. 9750722000

**THIRUVALUR (2.30PM-5.30 PM)**
Gethsamane Prayer Center, HSR Tower (Near Gowdi Church) Theradi, Thiruvallur. 9442885315

# அப்பாவின் உண்மை நிலை...

சிறு தகவல்: லிவிங்ஸ்டன்



ஒரு தந்தையும் அவருடைய 8 வயது மகனும், சுமார் 6 லட்சம் மதிப்புள்ள ஒரு காரை வாங்குவதற்குத் தேவைப்படும் கடன் பற்றி அறிந்து கொள்வதற்காக வங்கிக்கு வந்தனர். நான் அந்த சிறுவனிடம்,'உனது அப்பா எந்த காரை உனக்காக வாங்கப் போகிறார்?', என்று கேட்டேன். அதற்கு அவன்,' நான் ஒரு ஃபெராரி கார் வாங்கப் போகிறேன். என்னுடைய அப்பா அதற்கு பணம் செலுத்துவார்' என்றான். அப்பா சிரித்தார், ஏனென்றால் அவருடைய சம்பாத்தியத்தால் அது நடக்கப்போவதில்லை என்று அவருக்குத் தெரியும். நாம் 'யதார்த்தம் அல்லது உண்மைநிலை' என்று சொல்வதை குழந்தைகள் ஒருபோதும் கருத்தில் கொள்வதில்லை என்பதை எண்ணி நான் ஆச்சரியமடைந்தேன். அவர்கள் தங்கள் அப்பா தங்கள் அருகில் இருக்கும் வரை, தாங்கள் கனவு காண்கின்ற எதையும் வாங்கவோ, சொந்தமாக்கிக் கொள்ளவோ அல்லது செய்யவோ முடியும் என்றே நினைக்கின்றனர். அவர்கள் எங்கிருந்து இதையெல்லாம் கற்றுக் கொண்டார்கள்? உலகப்பிரகாரமான குடும்பத்திற்குள் அனுப்பப்படும் முன்பு பரலோகத்தில் அவ்வாறு இருந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். தங்களுடைய எல்லா தேவைகளையும் சந்திக்கும் பரமபிதா தங்கள் பக்கத்தில் இருப்பதால், அவர்கள் எல்லாவற்றையும் பெற்றிருக்கிறார்கள் மேலும் அவற்றை எல்லாருடனும் பகிர்ந்து கொள்ளவும் செய்கிறார்கள்.

**இதைத்தான் இயேசு சொல்லுகிறார், ' சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவர்களைத் தடைபண்ணாதிருங்கள், பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது' (மத்தேயு19:14)**



# மௌன யுத்தம்

**யோசேப்பு - 3**

ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் சந்திக்கும் பாவ சோதனையின் போது, அவனுக்குள் ஒலிக்கும் இரண்டு வித குரல்களில் எவற்றுக்கு கீழ்ப்படிவது என்ற தனி மனிதனின் மனப்போராட்டமே மௌன யுத்தம். ஒவ்வொரு மாதமும் ஒரு கதாபாத்திரத்திற்குள் நடக்கும் மௌன யுத்தத்தை பார்த்து வருகிறோம். அன்னிய மண்ணிலும் கண்ணியமாக வாழ்ந்த தேவ மனிதன், எந்த தோட்டத்தில் நடப்பட்டாலும் பூப்பூக்கும் கனிதரும் திராட்சை செடியான யோசேப்பு என்னும் அழகான இளைஞனை பற்றி இந்த மாதம் பார்க்கலாம். யோசேப்பு இல்லத்தை விட்டு வெகு தொலைவில் இருந்தார். இனி இல்லத்தினருடன் உறவு கிடைக்குமென்ற நம்பிக்கை துளிக்கூட இல்லாத சூழ்நிலை. எப்படி வாழ்ந்தாலும் கேட்பதற்கு ஆளில்லை. இது சரி, இது தவறு என்று அறிவுரை கூறவோ, சரியாக வாழும் முறையை கற்றுத் தந்து வழிநடத்தவோ யாரும் இல்லை. இந்த நிலையில் தனது மதிப்பிற்குரிய எஜமானின் மனைவியால் யோசேப்பிற்கு நித்தம் நித்தம் சோதனை வந்துக் கொண்டிருந்தது. (ஆதி. 39).

**யோசேப்பின் மனதில் நடந்திருக்கும் போராட்டத்தின் கற்பனைக் காட்சி இதோ...**

என்ன சோதனை! என் எஜமானனின் மனைவி ஏன் இப்படி நடந்துக் கொள்கிறார்கள்? அவர்களது அந்தஸ்து என்ன? என் எஜமான் தன் மனைவியை எவ்வளவாய் நம்புகிறார்? இந்தக் கொடிய பாவத்தில் நான் ஒருநாளும் சிக்கி விடக்கூடாது.

கர்த்தர் தானே எனக்கு இவ்வளவு அழகையும் வசீகரத் தோற்றத்தையும் கொடுத்துள்ளார். கன்னிப் பெண்கள் மட்டுமல்ல திருமணமான திருமதிகளும் கூட என் அழகில் மயங்குகின்றனர். இந்த வீட்டில் என் எஜமானுக்கு அடுத்த ஸ்தானத்தில் அவள் தான் இருக்கிறாள். நான் மட்டும் 'சரி' என்று சொன்னால்... யாருக்கு தெரியப் போகிறது? என் தகப்பனாரோ, சகோதரர்களோ யாரும் இந்த இடத்தில் இல்லையே.

ஐயோ, வேண்டவே வேண்டாம். என் கர்த்தருடைய கண்கள் இரவும் பகலும் என்னை நோக்கிக் கொண்டிருக்கிறது. அவருக்கு மறைவாக எங்கே செல்ல முடியும்? ஒருநாளும் இந்த பொல்லாங்கை நான் செய்து என் தேவனை துக்கப்படுத்தக் கூடாது. என்னை நம்பி என்னிடம் எல்லாப் பொறுப்புகளையும் ஒப்படைத்துள்ள என் எஜமானுக்கு ஒருநாளும் துரோகம் இழைக்கக்கூடாது.

ஆனால் என் எஜமானியம்மா வருந்துவார்களே, என்னைப் பார்க்கும் போது மலரும் அவர்கள் முகம், நான் வேண்டாம் என்று விலகும் போது வருந்துமே. ஒரு பெண்ணே தைரியமாய் அழைக்கும்போது நான் ஏன் அஞ்ச வேண்டும்? ஒரு நாளா? இரண்டு நாளா? நித்தம் நித்தம் அழைக்கிறார்களே. ஒரே ஒருநாள் மட்டும் சரி என்றால் என்ன?

இல்லை... இல்லை ஒருநாளும் மனிதர்களை பிரியப்படுத்த விரும்பக் கூடாது. ஒருநாள் செய்தாலும் பாவம் பாவமே. யார் என்ன சொன்னாலும் சரி, என்ன நடந்தாலும் சரி, என் தேவனுக்கு விரோதமாக ஒருநாளும் நான் பாவம் செய்யமாட்டேன், இது உறுதி.

இந்த யோசேப்பைக் குறித்த தேவ திட்டம் உன்னதமானது. அதை எப்படியாவது தடுத்து விடலாம் என்று சாத்தான் முயற்சித்தான். அதற்காக அவன் உபயோகித்த ஆயுதமே சிரித்த முகத்துடனான அவனது எஜமானியம்மா. பாவம் இனிப்பாக வந்தாலும் அது விஷமே. வஸ்திரம் கறைப்பட்டால் வெளுக்கலாம், வாழ்க்கை கறைபட்டால்? வஸ்திரம் போனால் வாங்கி விடலாம், மானம் பறிபோனால் எப்படி என்று சிந்தித்து உணர்ந்திருந்த யோசேப்பு சிரித்து வந்த பாவத்தை விட்டு விலகி ஓடினார், இதனால் வந்த விளைவினால் சிறைவாசம் சென்றார். ஆனால் இரும்பு சிறைகள் ஆத்துமாவை கறைப்படுத்தாது, பாவ சிறையோ வாழ்வை சிதறடிக்கும் என்பதில் கவனமாய் இருந்ததால் வீட்டுக்கு அதிகாரியாக இருந்த யோசேப்பு நாட்டுக்கே ஆளுநரானார். தனது குடும்பத்திற்கு, தகப்பன் வீட்டாருக்கு, உறவினர்களுக்கு ஏன் முழு தேசத்திற்குமே ஆசீர்வாதமாய் மாறினார்.



**அன்பு வாலிப சகோதர, சகோதரி! இன்று நீங்களும் யோசேப்பைப் போல ஏதோ ஒரு சோதனையை அனுதினமும் சந்தித்து வரலாம். யாருக்குத் தெரியப் போகிறது? என் நண்பர்கள் செய்கிறார்கள், நான் செய்தால் என்ன? நான் 'No' சொன்னால், அவன்/அவள் வருந்துவானே/ளே என்று மனதினுள் பல போராட்டங்கள் நிகழ்கின்றதா? கவனமாய் இருங்கள். பாவத்திற்கு மட்டும் Ok சொல்லி விடாதீர்கள் உங்கள் எதிர்காலமே இருளாகி விடும். நீங்கள் வெளிச்சத்தின் பிள்ளைகள் அநேகருக்கு முன்மாதிரியாய் இருக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். இந்தக் கொடிய நாட்களில் அதிகமாய் வேத வசனங்களை தியானியுங்கள், கூடுமானால் மனனம் செய்யுங்கள் ஏனென்றால் கர்த்தருடைய வசனமே கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.**

**"...உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" (லூக்கா 11:35)** ●

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
சத்தியம் TV சனிக்கிழமை 6:30am
அதே நேரத்தில் Youtube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்
Sathiyam TV Comforter DIGITAL CHANNEL YouTube
வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட
ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!
9750955547

சாதனை: சுமா



# மன உறுதி!

ஏழை விவசாயின் மகனாக பிறந்து, படிப்பதற்கு எந்த வசதியுமில்லாமல் கஷ்டப்பட்டு படித்து, முடித்து, பல சவால்களை தாண்டி மாபெரும் வளர்ச்சி அடைந்து இன்றைக்கு ரூ.3300 கோடிக்கு தைரோகேர் என்ற நிறுவனத்தை கட்டமைத்த ஒரு சாதனையாளரை குறித்து பார்க்கப் போகிறோம். சாதனையாளராக உருவாகிக் கொண்டிருக்கும் இளம் நெஞ்சங்களை உற்சாகப்படுத்தவே இப்பகுதியை உங்களுக்காக தொகுத்து வழங்குகிறோம்.

Thyrocare®
Think Thyroid. Think Thyrocare.

மின்சார வசதியும், பேருந்து வசதியும் பெரிதும் இல்லாத கோவைக்கு அருகிலுள்ள ஒரு சின்ன கிராமத்தில் ஏழை விவசாயிக்கு மகனாக பிறந்தார் வேலுமணி அவர்கள். இவர் தமிழ் வழி கல்வியை தான் படித்தார். வறுமையின் மத்தியிலும் பள்ளிக்கு செல்வதை நிறுத்தவில்லை. பஞ்சாயத்து பள்ளியில் கொடுக்கும் மதிய உணவை சாப்பிடுவார். சுமாராக படித்தாலும் தானே முயற்சித்து கணக்கு அறிவியல் பாடங்களைக் கற்றார். தன்னுடைய கல்லூரி படிப்பையும் முடித்தார். போதிய பணி அனுபவமும், சரளமாக பேசும் ஆங்கிலத் திறமையும் இல்லாத காரணத்தால் நிரந்தர வேலை இவருக்கு கிடைக்கவில்லை. பல நிறுவன நேர்காணல்களில் இவர் நிராகரிக்கப்பட்டார். இறுதியாக மாத்திரை தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் மாதம் 150 ரூபாய் சம்பளத்திற்கு வேலைக்குச் சேர்ந்தார். இவர் வேலைக்குச் சேர்ந்த மூன்று ஆண்டுகளில் அந்நிறுவனமும் மூடப்பட்டது. வாழ்க்கையில் மாற்றத்தை நோக்கி இருந்த வேலுமணி, செய்தித்தாளில் பணியிடத்துக்கான விண்ணப்பத்தை பார்த்து கையில் 82 ரூபாய் இரயில் டிக்கெட் மற்றும் 400 ரூபாய் பணத்துடனும் மும்பைக்கு சென்றார். அங்கே தங்க இடம் ஏதும் இல்லாமல் மும்பை இரயில் நிலையத்திலே 3 நாள் தங்கினார்.

பின்னர் மும்பையிலுள்ள பாபா அணு ஆராய்ச்சி மையத்தில் ஆய்வக உதவியாளராக பணியாற்றத் தொடங்கினார். அங்கு பணி புரிந்துக் கொண்டே முதுகலைப் பட்டத்தையும், டாக்டர் பட்டத்தையும்





வெற்றிகரமாக முடித்தார். பிறகு அரசு வேலை, கை நிறைய சம்பளம், வசதியான வாழ்க்கை என இவர் விரும்பிய அனைத்தும் இருந்தாலும், வாழ்க்கையில் ஏதாவது பெரிதாக சாதிக்க வேண்டும் என்ற வெறி மட்டும் இவரிடம் ஓயாமல் போராடிக் கொண்டிருந்தது. 14 ஆண்டுகள் பாபா அணு ஆராய்ச்சி மையத்தில் வேலை பார்த்த இவர், தனது வேலையை ராஜினாமா செய்தார். தனக்கு கிடைத்த ரூ. 2 இலட்சம் வருங்கால வைப்பு நிதியைக் கொண்டு 1995ல், 200 சதுர அடியில் 'Thyrocare' என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். ஸ்டேட் வங்கியில் பணிபுரிந்த இவரது மனைவி சுமதி தைரோகேர் நிறுவனத்தின் முதல் ஊழியராக சேர்ந்தார்.

**போதிய பணி அனுபவமும், சரளமாக பேசும் ஆங்கிலத் திறமையும் இல்லாத காரணத்தால் நிரந்தர வேலை இவருக்கு கிடைக்கவில்லை. பல நிறுவன நேர்காணல்களில் இவர் நிராகரிக்கப் பட்டார்.**

1882ல் கோவையிலிருந்து மும்பைக்கு கையில் கொஞ்சம் பணத்துடன், தமிழ் மொழி தவிர வேறு எந்த மொழியும் தெரியாமல், "நான் கோவையிலிருந்து மும்பைக்கு வந்தபோது கையில் எதுவும் இல்லாமல் மனதில் உறுதியை மட்டுமே கொண்டு வந்தேன்" என்று வேலுமணி அவர்கள் கூறுவார்கள்.

வேலுமணி அவர்கள் படித்து முடித்தவுடன் போதிய பணி அனுபவம் இல்லை என்று கூறி பல நிறுவனங்களும் வேலைத்தர மறுத்ததால், இன்று இவரது நிறுவனத்தில் பணிபுரிபவர்களில் 98% பேர் முன்அனுபவம் இல்லாதவர்களையே பணியமர்த்தப்பட்டுள்ளனர். வேலுமணி அவர்கள் தொழில் தொடங்கியபோது நிறுவனம் என்றால் என்ன? தொழில் என்றால் என்னவென்றே தெரியாமலே தொடங்கினார். ஆரம்பித்த பிறகு தான் பலவற்றை கற்றுக் கொண்டார். இவருடைய நோக்கம் எல்லாம் அதிக சம்பளம் ஈட்டுவதில் இல்லை. அதற்கு மாறாக ஒரு வெற்றியாளனாக வர வேண்டும் என்பதே இவரது நோக்கம். ஏழ்மையும், எளிமையுமே இவரது வெற்றிக்கு உறு துணையாக இருந்தன. இதுமட்டுமல்லாமல் தைராய்டு வளர்ச்சிதை மாற்றம், நாளமில்லா சுரப்பி சோதனைகள் போன்ற குறிப்பிட்ட துறையில் அதிக கவனத்தை செலுத்தி வெற்றிக் கண்டார்.

1978-79 ஆண்டுகளில் 150 ரூபாய் சம்பளத்துடன் தொடங்கிய வேலுமணி அவர்களின் வாழ்க்கை இன்று 3700 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு நிறுவனத்தை உருவாக்கும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது. அவருக்கென்று சொந்த வீடு கிடையாது.



*அன்பான வாலிபர்களே, நாம் எந்த இடத்தில் பிறந்தோம் என்பது முக்கியமல்ல. நாம் எதற்கு நேராக ஓடிக் கொண்டிருக்கின்றோம் என்பதே முக்கியம். திரு.வேலுமணி அவர்கள் வெற்றிக்கான பாதையை சரியாக தேர்ந்தெடுத்து வெற்றிக் கண்டார். இன்றைக்கு உங்களின் ஓட்டம் இலக்கை நோக்கி ஓடுவதில் உள்ளதா? அல்லது இலக்கை அடைய முடியவில்லை என்று மன உறுதியை இழந்து உள்ளீர்களா?* ●

# வெளிச்சத்தை பற்றிக் கொண்டவர்கள்



## சமாரிய ஸ்தீரி

புறஜாதியார் என்று இஸ்ரவேல் ஜனங்களால் சமாரியர்கள் புறக்கணிக்கபட்டவர்கள். அவர்களிடம் தொடர்பு வைத்துக் கொள்ளவோ, சம்மந்தம் கலக்கவோ விரும்பாதவர்கள். இயேசு கிறிஸ்து யூத வம்சத்தில் பிறந்தாலும், அவர் யாரையும் வெறுக்கவில்லை. யாரும் மதிக்காத, அனைவராலும் இகழப்பட்ட அவமானத்தின் சின்னமாக இருந்த சமாரிய ஸ்திரியை தெரிந்து கொண்டு, தன்னை அந்த பெண்ணிற்கு வெளிப்படுத்தினார். இயேசு தான் இரட்சகர், மேசியா என்றும், நித்திய ஜீவ வார்த்தைகள் அவரிடத்தில் உண்டென்று அவளுக்குத் தெரிந்த போது, அதை புறக்கணிக்காமல், இயேசு என்ற வெளிச்சத்தைப் பற்றிக் கொண்டு, அந்த வெளிச்சத்தை தான் இருந்த பட்டணத்திற்கு கொண்டு சென்று, அநேகருக்கு வெளிச்சமாக மாறினாள். அந்த ஸ்தீரியினுடைய வார்த்தையினிமித்தம் அநேகர் அவர் மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள் (யோவான் 4:39)

*வாலிபர்களே! நீங்களும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறீர்களா? இயேசுவைப் பற்றிக்கொள்ளுங்கள், உங்களையும் அநேகருக்கு வெளிச்சமாக மாற்றுவார்!*

## ரூத்

ரூத் ஒரு மோவாபிய கைம்பெண், இஸ்ரவேல் தேசத்திலிருந்து மோவாப் தேசத்தில் குடியேறிய நகோமியின் மகனை திருமணம் செய்து கொண்டு, சில ஆண்டுகளில் தன் கணவனை இழந்தாள். ஆனாலும் தன் கணவன் மூலமாகவும், தன் மாமியின் மூலமாகவும் இஸ்ரவேலின் தேவனை குறித்து அறிந்து கொண்டாள். நகோமி மீண்டும் இஸ்ரவேல் தேசத்திற்கு போக மனதாயிருந்து, தன் இரண்டு மருமகள்களையும் (ஓர்பாள், ரூத்) தங்கள் தாய் வீட்டிற்கு செல்லும்படி வேண்டிக் கொண்டாள். அதைகேட்டு ஓர்பாள் அவளை விட்டுச் சென்றாள். ஆனால் ரூத்தோ, என்ன ஆனாலும் சரி, வயது சென்ற தன் மாமியையோ, எல்லாவற்றிற்கும் மேலாக தான் பெற்று கொண்ட மெய் தேவனை விட்டு விடக் கூடாது என்ற வைராக்கியத்தில் இஸ்ரவேல் தேசத்திற்கு சென்றாள். எந்த ஒரு பெண்ணுக்கும் தாய் வீடு என்பது சொர்க்கம் போன்று தான் இருக்கும். ஆனால் அதையும் தேவனுக்காக விட்டுவிட்டு, அவரை பின்பற்றினாள். அந்த வெளிச்சத்தின் தேவனை பின்பற்றினபடியினால் ஒரு ஆசீர்வாதமான எதிர்காலத்தைப் பெற்றுக் கொண்டு, உலகத்தின் இரட்சகரான இயேசு கிறிஸ்து அவள் வழியாக வந்த சந்ததியில் பிறந்தார். ...நீர் தங்கும் இடத்தில் நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன் (ரூத் 1:16).



*வாலிபர்களே! இன்றும் அதே தேவனை ஆராதிக்கிற நாம் அவருக்காக எல்லாவற்றையும் விட்டு அவரை பின்பற்ற ஆயத்தமாக இருக்கிறோமா?*

## லோத்தின் பிள்ளைகள்



ஆபிரகாமை தேவன் தன் சொந்த தேசத்தை விட்டு அவர் காண்பிக்கும் தேசத்திற்கு போக கட்டளையிட்ட போது, தன் சகோதரனின் மகனாகிய லோத்தையும் தன்னோடு கூட்டி சென்றார். ஆபிரகாமோடு பல ஆண்டுகள் கூட சுற்றி திரிந்ததினால், ஆபிரகாமின் தேவன் எப்படிப்பட்டவர் என்று அறிந்திருந்தான். ஆனால் சில வருடங்கள் கடந்த பிறகு, ஆபிரகாமை விட்டு செழிப்பான திசையை நோக்கி (சோதோமிற்கு) பிரிந்து சென்றான். என்னதான் லோத்து தேவனுக்கு பயந்தவராகவும், தேவனை விசுவாசிக்கிறவராகவும் இருந்தாலும், அவரது மகள்கள் தன் தகப்பனிடத்தில் காணப்பட்ட விசுவாசத்தையும், தேவனுக்கு பயப்படும் பயத்தையும் பெற்றுக்கொள்ள வில்லை. வெளிச்சத்தின் தேவனை பற்றிக்கொள்ளமல் போனதினால், தன் தகப்பனோடு பாவமான காரியத்தை செய்தார்கள். இதனால் தேவன் அருவருக்கும் மோவாப், ஏதோம் என்னும் இரண்டு சந்ததிகளை பிறப்பித்தனர். அதில் ஏதோம் என்ற சந்ததி பூமியில் இராதபடி கர்த்தர் அற்றுப்போகப் பண்ணினார். தேவனை அவர்கள் சமீபமாக கொண்டிருந்தாலும், அந்த தேவனின் வெளிச்சத்தை பற்றிகொள்ள தவறியதினால், சாபமாக மாறினார்கள்.

*வாலிபர்களே! இன்றும் நான் கிறிஸ்தவ குடும்பத்தில் தான் பிறந்திருககிறேன், அதனால் எப்படியும் பரலோகம் சென்று விடுவேன் என்று எண்ணுவாயானால், ஏமாந்து போவாய். ஆனால் வெளிச்சத்தைப் பற்றிக்கொண்டு, அதை பின்தொடர்ந்து சென்றால் இருளான உலகில் பிரகாசமாக ஒளி வீச முடியும்.*

## ஏலியின் குமாரர்கள்



ஏலியின் குமாரர்கள் - ஓப்னி மற்றும் பினெகாஸ் தேவனுடைய ஆலயத்தில் ஆசாரிய ஊழியம் செய்து வந்தவர்கள். ஆசாரிய ஊழியம் என்பது இஸ்ரவேல் தேசத்தில் மிக கனம் பொருந்திய ஊழியம், லேவி கோத்திரத்தினர் இந்த ஆசாரிய பணிக்காகவே விசேஷமாக பிரித்து எடுக்கப்பட்டவர்கள். கர்த்தரே அவர்களுக்குப் பங்கு. ஆனால் ஓப்னியும், பினெகாசும் தாங்கள் இருந்த ஸ்தானத்தையும், அதின் மதிப்பையும் உணராது, கர்த்தர் அருவருக்கும் காரியங்களை செய்து வந்தார்கள் (1 சாமுவேல் 2:17,22,25). இதன் நிமித்தம் கர்த்தர் அவர்களை அழிக்க ஆயத்தமாக இருந்தார். தொடர்ந்து கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்து வந்தப்படியினால் அவர்களை கர்த்தர் அழிவுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார் (1 சாமுவேல் 4:17). தேவனுடைய ஆலயத்தில் தேவனுக்கென்று கனமான ஊழியத்தை செய்யும் பொறுப்பை பெற்றிருந்தும், அந்த வெளிச்சத்திற்கு மிக அருகில் இருந்தபோதும், அதைப் பற்றிக் கொள்ளாமல் இருளை தேர்ந்தெடுத்தபடியால் அவர்கள் முடிவு பரிதாபமாக இருந்தது. ஏலியின் குமாரர்கள் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை (1 சாமுவேல் 2:12).

*வாலிபர்களே இன்றும் நாம் தேவனுக்காக ஊழியம் செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டு, அவரிடம் இருந்து வரும் வெளிச்சத்தை பற்றிக்கொள்ளமலும், அதை வெளிப்படுத்தாமலும் இருப்போமானால் நாம் பரிதபிக்கக்கூடிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு விடுவோம். ஆகவே நமக்குள் இருக்கும் வெளிச்சம் இருளாகாதபடி எச்சரிக்கையாக இருப்போம்!*

செய்தி: சகோ. மோகன் சி. லாசரஸ்





# பாதுகாக்கிற தேவன்!



**யோபு** தேவனுக்கு பயந்து, உத்தமனாய் நடக்கிறவன், தன்வீட்டார் அனைவரோடும் தேவனுக்கு பயந்து நடக்கிற தேவ பக்தியுள்ள ஒரு மனிதன். அவர் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் யோபுவினுடைய சரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

யோபின் தேவன் எப்படிப்பட்டவர்? கர்த்தர் யோபுவின் வாழ்க்கையில் இடைப்பட்ட காரியம் என்ன? **"நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ? அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர்; அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று"** **(யோபு 1:10).** யோபையும், அவனுடைய குடும்பத்தையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் கர்த்தர் வேலியடைந்து பாதுகாத்தார்.



யோபின் தேவன் பாதுகாக்கிற தேவன். யோபுவையும் அவனுடைய குடும்பம், அவனுடைய சொத்துக்கள், பிள்ளைகள், எல்லாவற்றையும் கர்த்தர் வேலியடைத்து பாதுகாத்தார் என்று வசனம் சொல்கிறது. ஒன்றை நாம் அறிந்து கொள்ள வேண்டும், நாம் எப்போது இரட்சிக்கப்பட்டு, இயேசுவை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு அவருடைய பிள்ளையாக மாறுகிறோமோ, அவருடைய இரத்தத்தில் கழுவப்பட்ட அனுபவத்தைப் பெற்றுக் கொள்கிறோமோ, அப்பொழுதே நமக்கு கர்த்தர் ஒரு பாதுகாப்பைக் கொடுக்கிறார். நம்மை சுற்றிலும் வேலியடைந்து தேவன்பாதுகாக்கிறார். நீங்கள் இரட்சிக்கப்பட்டிருந்தால் உங்களை தேவன் வேலியடைத்து பாதுகாக்கிறார் என்று அர்த்தம். பாவத்தை விட்டு மனந்திரும்பி அவருடைய பிள்ளையாக மாறினால் தேவனுடைய பாதுகாப்பின் வேலி நமக்காக வைக்கப்படுகிறது என்பதை தேவ பிள்ளைகள் விசுவாசிக்க வேண்டும். கர்த்தாவே! என் வீட்டை, என் பிள்ளைகளை, என் சொத்துக்களை நீர் பாதுகாக்கிறதற்காக ஸ்தோத்திரம், எங்களை சுற்றிலும் வேலியடைத்திருக்கிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம் என்று கர்த்தருக்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால் நாம் வாழ்கின்ற உலகத்தில் நம்மை சேதப்படுத்தும்படியான ஆபத்துக்கள் சூழ்ந்திருக்கிறது. பொல்லாத மனிதர்களால் உண்டாகிற ஆபத்து, இயற்கையினால் உண்டாகிற ஆபத்து, அசுத்த ஆவிகளால் வரக்கூடிய ஆபத்து நம்மை சுற்றிலும் காணப்படுகிறது. எந்த நேரம் எந்தவிதமான ஆபத்து வரும் என்று நமக்குத் தெரியாது. திடீரென்று விபத்து வந்து விடுகிறது, திடீரென்று ஒரு ஆபத்து வந்து விடுகிறது, நாம் பயமில்லாதபடி சந்தோஷமாய், மகிழ்ச்சியோடு வாழ்வதற்கு காரணம் என்ன? இஸ்ரவேலை காக்கிற தேவன் தூங்குவதுமில்லை, உறங்குவதுமில்லை. கர்த்தர் நம்மை வேலியடைத்து பாதுகாக்கிறார். யோபுவை பாதுகாத்த தேவன்

என்னையும் பாதுகாக்கிறார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். கர்த்தர் நம்மை பாதுகாக்கிறதை பல சம்பவங்கள் மூலமாய் அறிந்து கொள்ள முடியும். .

நான் அமெரிக்கா தேசத்திலுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் பட்டணத்திற்கு ஊழியத்திற்கு போன போது மலைப் பகுதியில் ஒரு பகுதி முழுவதும் நெருப்பினால் தீ பிடித்து வீடுகளெல்லாம் எரிந்து சாம்பலாகி கிடந்தது. காட்டு தீ பரவி வந்ததினால் போலீஸ் உடனே தலையிட்டு, வீட்டை காப்பாற்ற முடியாது, உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் என்று எல்லாரையும் வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார்கள். சில முக்கியமான பொருட்களை எடுத்துக் கொண்டு வெளியேறினார்கள். அதில் தமிழ் நாட்டை சார்ந்த இரட்சிக்கப்பட்ட ஒரு குடும்பம் இருந்தது. தீ விபத்து ஏற்பட்ட நேரத்தில் அவர்கள் வீட்டில் இல்லை. தினமும் வீட்டில் குடும்ப ஜெபம் செய்து, கர்த்தருடைய பிள்ளைகளாக வாழ்ந்து கொண் டிருந்தார்கள். நெருப்பு பரவி ஒவ்வொரு வீடாக தீ பற்றிக் கொண்டு வந்தது. அந்தப் பகுதியை சுற்றிலும் இருக்கிற அத்தனை வீடும் தீ பற்றி எரிந்து விட்டது, கர்த்தரை நேசிக்கிற விசுவாசி பிள்ளைனகளின் வீடு மாத்திரம் நெருப்பு பற்றாதபடி அப்படியே நின்றுக் கொண்டிருந்தது.



காட்டுப் பகுதியிலிருக்கிற அத்தனை வீடுகளை எரித்தப் போதிலும், இந்த வீட்டு எல்லை வரைக்கும் நெருப்பு வந்திருக்கிறது. அதற்கு ஒரு அடையாளமாக அந்த வீட்டு மரத்தூண் வரைக்கும் நெருப்பு பிடித்திருக்கிறது, அப்புறம் அணைந்து விட்டது.

அங்கிருக்கிற எல்லோருக்கும், எப்படி இவர்கள் வீடு மாத்திரம் தீ பற்றாமல் இருந்தது என்று ஒரே ஆச்சரியமாக பார்த்தார்கள். தேவன் அந்த வீட்டை சுற்றிலும் வேலியடைத்து பாதுகாத்தார் என்று தேவ பிள்ளைகளுக்கு தெரியும். நானும், என் வீடும், என் பிள்ளைகளும், என் சொத்துக்களும் உமக்கு சொந்தம் என்று அர்ப்பணித்து வாழும்போது தேவன் நம்மை சுற்றிலும் வேலி வைத்து பாதுகாப்பார். யோபுவை சுற்றியிலும் கர்த்தர் வேலியை வைக்கிறார்.

**நம் வீட்டை சுற்றிலும் கண்ணுக்கு தெரியாத பாதுகாப்பின் வேலியை கர்த்தர் நமக்கு வைத்திருக்கிறார்.**

எந்த ஆபத்து வந்தாலும் எல்லை வரைக்கும் தான் வரமுடியும். அந்த எல்லையை தாண்ட முடியாது. அந்த மாதிரிதான் இன்றைக்கும் கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும், உங்கள் பிள்ளைகளையும் வேலியடைத்து பாதுகாத்து வருகிறார். உங்கள் வீட்டில் பழைய சைக்கிள் ஓட்டையாக இருந்தால்கூட யாரும் அதைத் தொட முடியாது. இது என் பிள்ளைகளுக்கு சொந்தமானது என்று கர்த்தர் சொல்வார். அந்த அளவிற்கு தேவன் தன்னுடைய பிள்ளைகளை பாதுகாக்கிற தேவனாயிருக்கிறார். இவை கண்ணுக்குத் தெரிந்த ஆபத்து.

நம் கண்ணுக்கு தெரியாத ஆபத்து வருகிறது. பகலில் பறக்கும் அம்புகள், இரவில் நடமாடும் கொள்ளை நோய்கள், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரம் என்று 91ம் சங்கீதத்தில் வாசிக்கிறோம். பில்லி சூனியத்தின் மூலம் அசுத்த ஆவிகளை நம்மீது ஏவி நம் குடும்பத்தை, நம் வியாபாரத்தை, நம் சரீரத்தை தாக்குவதற்கு தூரத் திலிருந்து ஏவுகிறது தான் அம்பு. இரவில் கொள்ளை நோய்கள் நடமாடும் என்று வேதப்புத்தகத்தில் எழுதியிருக்கிறது. எந்த வீட்டில் பாதுகாப்பு இல்லையோ அந்த வீட்டிற்குள் நுழைந்து அந்த வீட்டாரை தாக்கி விடும். இதெல்லாம் கண்ணுக்கு தெரியாத ஆபத்துக்கள். அசுத்த ஆவி, பில்லிசூனியம், மந்திரம், இந்த கிரியைகள் எல்லாம் கண்ணுக்கு தெரியாத ஆபத்துக்கள். நாம் கண்ணால் பார்க்க முடியாது, அந்த ஆவிகள் பக்கத்தில் தான் சுற்றிக் கொண்டிருக்கும். நம்முடைய வீட்டை சுற்றிக் கொண்டிருக்கும். நம்முடைய தேவன் சகல இரகசியங்களையும் அறிந்திருக்கிற தேவன். நம் வீட்டை சுற்றிலும் கண்ணுக்கு தெரியாத பாதுகாப்பின் வேலியை கர்த்தர் நமக்காக வைத்திருக்கிறார்.



இப்பொழுது துஷ்ட மிருகங்கள் வராமல் இருக்க, ஷாக் அடிக்கிற மாதிரி வேலிகள் கட்டுகிறார்கள். கரண்டை கட் பண்ணினால் உள்ளே நுழைந்து விடலாம். ஆனால் கர்த்தர் நம்மை சுற்றிலும் வேலி வைத்துவிட்டால் எந்த சக்தியாலும் அதை தாண்ட முடியாது, யோபுவை சுற்றிலும் கர்த்தர் வேலி வைத்திருந்தார், யோபு மூலமாக கர்த்தர் மகிமைபடுகிறார், யோபுவை சேதப்படுத்த வேண்டும், இவன் வாயால் கர்த்தரை தூசிக்க வைக்க வேண்டும், முறுமுறுக்க வைக்க வேண்டும் என்று சொல்லி சாத்தான் வீட்டிற்குள் நுழைய முயற்சி பண்ணுகிறான். கர்த்தர் வேலி வைத்திருந்ததால் சாத்தானால் உள்ளே நுழைய முடியவில்லை. அவனுடைய பத்து பிள்ளைகளைத் தொடலாமா? என்று பிள்ளைகளுக்கு விரோதமாக எழும்புகிறான், பிள்ளைகளைச் சுற்றிலும் கர்த்தர் வேலி வைத்திருக்கிறார். அவனுடைய ஆடு, மாடுகளை சுற்றிலும் கர்த்தர் வேலி வைத்திருக்கிறார். எதையுமே சாத்தானால் நெருங்க முடியவில்லை.

ஏனென்றால் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் கர்த்தர் வேலியடைத்து பாதுகாக்கிறார் என்று வேதம் சொல்கிறது. எவ்வளவு அற்புதமான தேவன் நமக்கு இருக்கிறார் பாருங்கள்!

ஆயிரம் மந்திரவாதிகள் இணைந்து மந்திரவாதம் செய்தால்கூட உங்கள் வீட்டின் எல்லைக்குள் நுழையவோ, உங்களை நெருங்கவோ முடியாது. கர்த்தர் உங்களை சுற்றிலும் வேலியடைத்திருக்கிறார். நீங்கள் அதை விசுவாசிக்க வேண்டும். நீங்கள் அதற்காக துதிக்க வேண்டும். என்னையும், எங்கள் வீட்டையும், எங்கள் தொழிலையும், வாகனத்தையும், எல்லாவற்றிலும் சுற்றி வேலியடைத்திருக்கிறதற்காக ஸ்தோத்திரம். நீங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டால் தான் அந்த பாதுகாப்பு உங்களுக்குள் நிலைத்திருக்கும். யோபுவின் தேவன் நம்மையும் வேலியடைத்து பாதுகாக்கிற தேவன், அதை மறந்துவிடாதீர்கள்.

**அன்பான வாலிபர்களே! யோபுவின் தேவன் உங்கள் தேவன். இந்தக் கொள்ளை நோய் தேசத்தையே உலுக்கி கொண்டிருக்கும் போது, உங்களை இந்தக் கொள்ளை நோய்க்கு விலக்கி பாதுகாத்து வருகிறார் என்றால் தேவன் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் வேலியடைத்து வைத்திருக்கிறார். எனவே நீங்கள் சோர்ந்து போகாமல் தேவனை நோக்கி ஸ்தோத்தரியுங்கள். என்றென்றைக்கும் பாதுகாக்கும் தேவன் உங்களோடு இருப்பார் ●**

# வெளிச்சம்

### மகிழ்ச்சி கொண்டு வருகிற வெளிச்சம்

மகிழ்ச்சியின் வெளிச்சம் உண்டாக ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் . யூதருக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும் களிப்பும், கனமும் உண்டாயிற்று (எஸ்தர் 8:16)

### இருளை கடந்துபோக பண்ணுகிற வெளிச்சம்

யோபுவைபோல குறை சொல்லாமல், முறுமுறுக்காமல் பொறுமையாய் இருக்க வேண்டும். அப்பொழுதுஅவர் தீபம் என் தலையின்மேல் பிரகாசித்தது. அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்துபோனேன் (யோபு 29:3)

### விடுதலையாக்கும் வெளிச்சம்

விடுதலை வேண்டுமானால் பேதுருவைப்போல கவலைப்படாமல் இருக்க வேண்டும். அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான். அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. அவன் பேதுருவை விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது (அப். 12:7)




# தந்தையர் தினம்

ஜூன் 20

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 3வது ஞாயிற்றுக் கிழமை தந்தையர் தினமாக கொண்டாடி வருகிறோம். ஒவ்வொருவரும் தங்களுடைய தந்தையரை நேசித்து அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்வதே உண்மையான தந்தையர் தினம். ஆண்டுக்கு ஒருமுறை கொண்டாடுவதுடன் கடமை முடிந்தது என்று சொல்வது அல்ல. இந்த வருடத்திலிருந்து ஒரு தீர்மானம் செய்து உங்களை தந்தையரை மகிழ்விக்க உங்களை உற்சாகபடுத்துகிறோம்.

## உங்கள் தந்தையரை மகிழ்விக்க ...

**நேரத்தை செலவிடுங்கள்:** எந்த தந்தையிடமும் பிள்ளைகள் நேரத்தை செலவிடுவதில்லை. எனவே வாரத்தில் ஒருநாள் உங்கள் தந்தையுடன் உட்கார்ந்து அவருடைய வேலை சம்மந்தமான காரியங்கள், உடல்நிலை சம்மந்தமான காரியங்களை விசாரியுங்கள். தினமும் ஒரு வேளையாவது அப்பாவுடன் அமர்ந்து சாப்பிடுங்கள். அப்பொழுது அன்றைய நிகழ்வுகளைப் பரிமாறிக் கொள்ளும்போது, உங்கள் அப்பாவோடு நேரம் செலவிட்ட திருப்தி உண்டாகும்.

**ஆலோசனை கேளுங்கள்:** இன்றைய வாலிபர்கள் தந்தையர்களிடம் எந்த ஆலோசனையும் கேட்பதில்லை. மேற்படிப்பு மற்றும் வேலை தேடுகிறவர்கள், உங்கள் தந்தையரிடமும் சில ஆலோசனைகள் கேட்கலாம். அவர்களுடைய முன்அனுபவங்கள் உங்களுக்கு பயன்பெறு வதோடு, அவர்களிடம் ஆலோசனை கேட்கும்போது அவர்களுக்கும் உங்களுக்கும் உள்ள உறவு அதிகரிக்கும். உங்கள் மேல் நம்பிக்கை உண்டாகும்.

**பாசத்தைக் காட்டுங்கள்:** அன்பான வார்த்தைகளுடன் கனிவாகப் பேசுங்கள். கோபமாக இருக்கும்போது அன்பாக பேசி அவர்களை சந்தோஷப்படுத்துங்கள். அவர்கள் கோபமாக இருக்கும் போது நீங்களும் அவர்களை கோபப்படுத்தாதீர்கள்.

**பரிசுப் பொருட்களை வழங்குங்கள்:** உங்கள் தந்தைக்கு பிடித்த பரிசு பொருட்களான சர்ட், பர்ஸ், பென், பெல்ட், வாட்ச் மற்றும் பைக் என உங்கள் வசதிக்கேற்ப ஏதாவது வாங்கிக் கொடுங்கள். அப்பொழுது நீங்கள் அவர்களை எவ்வளவாய் நேசிக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்வார்கள்.

**வெளியே அழைத்துச் செல்லுங்கள்:** உலகில் உள்ள அனைத்து தந்தையரும் தான் பிள்ளை நன்றாக வாழ வேண்டும் என்பதற்காக அநேக காரியங்களை தியாகம் செய்வார்கள். ஆகவே பிள்ளைகளாகிய நீங்கள் வருடத்திற்கு ஒருமுறையாவது சொந்த ஊர், சுற்றுலா அல்லது அவர்கள் விரும்பும் இடங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களை சந்தோஷப்படுத்துங்கள்.





**அன்பான வாலிபர்களே! வேதத்தில் தகப்பனையும், தாயையும் கனம் பண்ணுவாயாக என்று ஒரு வேதவசனம் இருக்கிறது. அந்த வேத வசனத்தின்படி ஒவ்வொரு நாளும் நீங்கள் உங்கள் பெற்றோரை கனம் பண்ண வேண்டும். தந்தையர் தினத்தில் மட்டும் அவர்களுக்கு வாழ்த்து சொல்வதோடு விட்டுவிடாமல், அவர்களுடைய அன்றாட தேவைகளை நிவர்த்தி செய்யும்போது தான் உண்மையான தந்தையர் தினமாக அமையும்.**

*ஆதாரம்: இன்டர்நெட்*

# எரிந்து கொண்டே இரு!



உலகின் மிகப்பெரிய கண்டுபிடிப்பாக கருதப்படுவதுதான் ஒளி விளக்கு (Light Bulb). இரவை வெளிச்சமாக மாற்றி உலகை 24 மணி நேரமும் இயங்க வைப்பது இந்த ஒளி விளக்குகள் தான். என்ன தான் இந்த ஒளி விளக்குகள் இரவை பிரகாசிக்க வைத்தாலும், ஒரு Bulb-ன் Validity ஒருசில மாதங்கள் அல்லது ஒருசில ஆண்டுகள் மட்டுமே இருக்கும். அதன் பிறகு அதை மாற்றவோ, பழுது பார்க்க வேண்டிய நிலை வந்து விடும்.




ஆனால் இதற்கு எதிர்மறையாக, கலிபோர்னியாவில் உள்ள லிவர்மோர் (Livermore) என்ற பட்டணத்தில் இருக்கும் தீயணைப்பு நிலையத்தில் 60 watts bulb ஒன்று 120 ஆண்டுகளாக தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறது. ஆம், நீங்கள் சரியாக தான் வாசித்தீர்கள். நூற்றிருபது ஆண்டுகள், கேட்கவே ஆச்சரியமாகவும், வியப்பாகவும் இருந்தாலும் அதுதான் உண்மை.

இந்த பல்ப் 1901ஆம் ஆண்டு Adolphe Chaillet என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவரை 10,00,000 (10 லட்சம்) மணி நேரங்களுக்கு மேல் தொடந்து எரிந்து கொண்டிருக்கிறது. இந்த 120 ஆண்டுகளில் ஒரு சிலமுறை மாத்திரம் தவிர்க்க முடியாத காரணத்தினால் இந்த பல்ப் அணைக்கப்பட்டிருக்கிறது.

ஆராய்ச்சியாளர்கள் இந்த பல்ப் எப்படி இத்தனை ஆண்டுகள் தொடர்ந்து எரிகிறது என்று ஆராய்ச்சி செய்தும் முழுமையான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் இந்த விளக்கினுடைய Tungsten Filament இப்போது பயன்படுத்துகிற Bulb-யை விட 8 மடங்கு அதிகமான Thickness உள்ளதால் தான் இத்தனை வருடங்கள் எரிய முடிகிறது என்று கருதுகிறார்கள்.

இதைக் குறித்து வாசிக்கும்போது, வேதத்தில் யோவான் ஸ்நானகனை (John the Baptist) குறித்த ஒரு வசனம் தான் ஞாபகம் வருகிறது. **"அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்..." (யோவான்5:35).** யோவான் ஸ்நானகன், இயேசுவின் முதலாம் வருகைக்கு இஸ்ரவேல் ஜனங்களை ஆயத்தப்படுத்த வந்தவர், அவர் பிரகாசமாய் எரிந்து, தான் வந்த நோக்கத்தை நிறைவேற்றி விட்டு சென்றார்.

அன்பான வாலிபர்களே, இந்தக் கடைசி கால எழுப்புதலுக்கும், இயேசுவின் இரண்டாம் வருகைக்கும் வழியை ஆயத்தப்படுத்த தெரிந்து கொள்ளப்பட்ட நீங்கள் ஏதோ கொஞ்ச நாட்கள் எரிந்து விட்டு, பின்பு அணைந்து விடுவதற்கல்ல, கடைசிவரை தேவனுக்காக பிரகாசிக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார். இன்றைக்கு உங்கள் வெளிச்சம் எப்படி இருக்கிறது? பிரகாசமாக எரிகிறதா? மங்கி எரிகிறதா? அல்லது அணைக்கப்பட்டிருக்கிறதா? எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும், அந்த பல்பினுடைய Tungsten Filament அடர்த்தியாக (Thick) இருந்தது போல, உங்களுக்கும் தேவனுக்கும் நெருக்கமான உறவு இருந்தால், உங்களாலும் தொடர்ந்து எரிந்து பிரகாசிக்க முடியும். இது நீங்கள் எழும்பி பிரகாசிக்க வேண்டிய நேரம், எழும்பு! ஒளி கொடு! **"எழும்பிப் பிரகாசி; உன் ஒளிவந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது" (ஏசாயா 60:1)** ●

வேதமும், விஞ்ஞானமும்!




நிகழ்வு: ஜீலியட் கிளார்வின்

# யோசுவாவின் நீண்ட நாள்



யோசுவா 10-ம்அதிகாரத்தில்சூரியனும்,சந்திரனும் ஒரு பகல் முழுவதும் நடுவானில் தரித்து நின்ற சம்பவத்தை நாம் அறிந்திருப்போம். இதனை பலர் நம்ப மறுத்து 'சூரியன் நடுவானில் நிற்குமா; பூமிதானே சூரியனைச் சுற்றிக் கொண்டிருக்கிறது' என்ற பல கேள்விகளைக் கேட்டு பரிசுத்த வேதாகமம் விஞ்ஞானத்துக்கு ஒவ்வாத கட்டுக் கதைகள் என்று கூறுவோர் உண்டு. இதற்கு அறிவியல் பூர்வமாய் நிரூபிக்கப்பட்ட விடையை இப்பகுதியில் பார்ப்போம்.

சமீப காலத்தில் விஞ்ஞானிகளில் சிலர் வெளி கிரகங்களுக்குக் கோள்களை அனுப்புவற்கு கம்ப்யூட்டர்களைக் கொண்டு கணக்கெடுக்கும்பொழுது ஒரு குறிப்பிட்ட நாளில் கிரகங்கள் எந்தெந்த இடங்களில் இருந்திருக்கும் என்றும், பூமியின் சுழற்ச்சியைப் பற்றியும் பல பல தகவல்களை சேகரித்துக் கொண்டிருக்கும் போது ஒரு குறிப்பிட்ட இடத்தில் வந்ததும் கம்ப்யூட்டர் இயங்க மறுத்துவிட்டது; என்ன கோளாறு என்று கம்ப்யூட்டரை இயக்கியவர்கள் தேடும்போது ஒரு கால கட்டத்தில் ஒரு நாள் விடுப்பட்டு போயிற்று என்று விஞ்ஞானிகள் கண்டுப்பிடித்தனர்.

இது எப்படி இருக்க முடியும் என்று விஞ்ஞானிகள் தங்களின் மண்டைகளைப் போட்டு குழப்பிக் கொண்டிருக்கும்பொழுது ஒரு வாலிபன் தான் ஓய்வு நாள் பாடசாலையில் (Sunday Class), யோசுவாவின் காலத்தில் ஒரு நாள் சூரியன் நின்றுபோனதாக வேதத்தில் படித்ததாக கூறினான். உடனே அவர்கள் பரிசுத்த வேதாகமத்தை புரட்டி யோசுவா 10:12-14 வசனங்களில், கூறப்பட்டிருக்கும் தகவல்களின்படி கணக்கெடுக்குப்பொழுது, அந்த நாளில் 23 மணி நேரம் 20 நிமிடங்கள் நின்று போயிருக்கிறது என்று அவர்கள் கண்டுப்பிடித்தனர்.

அப்படியென்றால் இன்னும் 40 நிமிடங்களுக்கு என்ன செய்வது என்று அவர்கள் யோசிக்கையில் அதே வாலிபன் வேதத்தை புரட்டி எசேக்கியா ராஜாவின் காலத்தில் சூரியன் 10 பாகை பின்னிட்டுத் திரும்பியதை வாசித்து காண்பித்தான். பாகை என்பது ஆங்கிலத்தில் டிகிரி (Degree) என்று கூறப்படும். பூமி சுற்றுகையில் ஒரு டிகிரி போக 4 நிமிடங்கள் ஆகிறது; அப்படியானால் 10 டிகிரி (பாகை) போக 40 நிமிடங்களாகும்.

யோசுவாவின் காலத்தில் 23 மணி 20 நிமிடங்கள் காலம் நிறுத்தப்பட்டது; எசேக்கியாவின் காலத்தில் 40 நிமிடங்கள் காலம் பின்னிட்டுத் தள்ளப்பட்டது; ஆக மொத்தம் 24 மணி நேரம் நின்று போனது (யோசுவா 10:13; ஏசாயா 38:8). இவை இரண்டையும் கம்ப்யூட்டரில் சேர்த்துக் கணக்குப் போட்டவுடன் கம்ப்யூட்டர் சரியாக தன் கணக்கைச் செய்ய ஆரம்பித்ததாம்.

எனவே இதன்மூலம் நம் வேதத்தில் குறிப்பிடப்பட்டவைகள் அர்த்தமற்ற கட்டுக் கதைகளல்ல; அவை அனைத்தும் உண்மையாக நடந்த நிகழ்ச்சிகள் என்று அறிவியல் பூர்வமாய் நிரூபிக்கப்பட்டுள்ளது. வேதமே சத்தியம்!

# ஜெபக்கையேடு ஜூன் 2021

## மின்சாரம்

தமிழக மின்வாரியத்தின் கீழ் 2 கோடி வீட்டு மின் இணைப்புகள், 36 லட்சம் வணிகம் சார்ந்த இணைப்புகள், 7 லட்சம் தொழிற்சாலை இணைப் புகள், 21 லட்சம் விவசாயம் சார்ந்த இணைப்புகள், குடிசைகளுக்கு 11 லட்சம் என 3 கோடிக்கும் அதிகமான மின் இணைப்புகள் உள்ளது.

தமிழகத்திற்கு அனல், காற்றாலை, சூரியசக்தி, நீர்மின்நிலையங்களின் வாயிலாக மின்சாரம் கிடைக்கிறது.

இந்த மின்சாரம் பற்றாக்குறை ஏற்படுகிறதினால் தனியாரிடமிருந்து அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்யப்படுகிறது.

தமிழகத்தின் சுயசார்பு மின்திறன் 30% மட்டுமே உள்ளது. இதனால் மின்வாரியம் மற்றும் மத்திய தொகுப்பு இரண்டிலிருந்தும் 60% மின்சாரம் மட்டுமே கிடைக்கிறது. 40% மின்சாரம் தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறப் படுகிறது.

### ஜெபக்குறிப்புகள்

1. தமிழகத்தில் கொடுக்கப்பட்டுள்ள சுமார் 3 கோடிக்கும் அதிகமான மின் இணைப்புகளுக்கு சரியான மின்சாரம் விநியோகிக்கப்படஜெபிப்போம்.

2. காற்றாலை, சூரியசக்தி, நீர் மின்நிலையங்கள் மூலமாக கிடைக்கும் மின்சாரம் தடையில்லாமல் கிடைக்கப் பெற்று, தமிழகத்தின் மின்உற்பத்தி அதிகரிக்க ஜெபிப்போம்.

3. தனியார் மின்உற்பத்தி நிலையங்களிலிருந்து அதிக விலை கொடுத்து வாங்கும் நிலைமாறி, தமிழகத்திற்கு தேவையான மின்சாரம் தங்கு தடையின்றி கிடைக்க ஜெபிப்போம்.

4. மின்சார வாரியத்தில் நடைபெறும் முறை கேடுகள் தடுக்கப்பட்டு நீதியான முறையில் இயங்கவும், பணிபுரியும் ஒவ்வொருவரும் உண் மையுடனும், ஆண்டவருக்கு பயந்து தங்கள் பணிகளை செய்யவும் ஜெபிப்போம்.

5. மின்கட்டணம் ஒரு யூனிட்டிற்கு 7 ரூபாய் முதல் 9 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் ஏழைகள் பாதிக்கப்படாதபடி விலைகள் குறைக்கப்பட ஜெபிப்போம்.

## சத்துணவு திட்டம்

- தமிழகத்தில் 41 ஆயிரம் சத்துணவு மையங்கள் உள்ளன. இதில் 97 ஆயிரம் பேர் பணியாற்றி வருகின்றனர்.
- தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளியை சேர்ந்த 55 லட்சம் மாணவ, மாணவிகள் சத்துணவு சாப்பிடுகின்றனர்.
- ஒன்று முதல் 5ம் வகுப்பு வரையான ஒரு மாணவருக்கு பருப்பு சாதத்திற்கு ரூ.1.75, பிரியாணி உள்ளிட்ட சாதத்திற்கு ரூ.2.28 ஒதுக்கப்படுகிறது.
- 5ம் வகுப்பு வரையிலும் ஒரு மாணவருக்கு 100 கிராம் அரிசி, 15 கிராம் பருப்பு, 3 மில்லி எண்ணெயும், 6 முதல் 10ம் வகுப்பு வரையிலும் மாணவ மாணவிகளுக்கு 150 கிராம் அரிசி, 15 கிராம் பருப்பு, 3 மில்லி எண்ணெய் என்ற அளவு முறையுடன் சத்துணவு வழங்கப்படுகிறது.

### ஜெபக்குறிப்புகள்

1. தமிழகத்திலுள்ள 41 ஆயிரம் சத்துணவு மையங்களுக்காகவும் பணிபுரியும் 97 ஆயிரம் பேரையும் கர்த்தருடைய ஆளுகைக்கு ஒப்புக் கொடுத்து ஜெபியுங்கள்.

2. சத்துணவு சாப்பிடும் 55 லட்சம் மாணவ, மாணவியருக்கு நல்ல ஆரோக்கியமான உணவுகளை வழங்கி அரசு செயல்பட ஜெபிப்போம்.

3. ஏழை மாணவர்களின் பசியாற்ற அரசு கொண்டு வந்த திட்டத்தில், முறைகேடுகள் நடைபெறுவது தடுக்கப்படவும், பணி செய்கிறவர்கள் நேர்மையாக பணி செய்யவும் ஜெபிப்போம்.

4. தமிழகம் முழுவதும் காலியிடங்களை தகுந்த நபர்களை கொண்டு நிரப்பப்படவும், சரியான விகிதத்தில் உணவுகள் வழங்கப்படவும் ஜெபிப்போம்.

5. சாப்பாடு இல்லாமலும் பசியினாலும் எந்த ஒரு மாணவர்களும் படிப்பை இழந்து விடாத படிக்கும், அரசு கவனம் செலுத்தி செயல்படவும் ஜெபிப்போம்.

## உணவு வீணாகுதல்

- இந்தியாவில் ஒவ்வொரு தனிநபரும் ஆண்டு தோறும் 50 கிலோ உணவை வீணாக்குவதாக ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட உணவு கழிவு அட்டவணை 2021ஆம் ஆண்டுக்கான அறிக்கை வெளியிட்டுள்ளது.
- உலக அளவில் கடந்த ஆண்டு 931 மில்லியன் டன் உணவு அல்லது நுகர்வோருக்கு கிடைக்கும் மொத்த உணவில் 17% வீடுகள், சில்லறை விற்பனையாளர்கள், உணவகங்கள் மற்றும் பிற இடங்களில் வீணாக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட உணவு கழிவு அட்டவணை அறிக்கை வெளியிட்டுள்ளது.
- சுமார் 300 கோடி மக்கள் ஆரோக்கியமான உணவை வாங்க முடியாமல் தவிக்கின்றனர். ஆண்டுதோறும் பல நூறு பேர் பட்டினியால் சாகும் போது, கடந்த 2019ஆம் ஆண்டில் 931 மில்லியன் டன் உணவுப்பொருட்கள் வீணடிக்கப்பட்டுள்ளன.
- ஆண்டுதோறும் இந்தியாவில் சுமார் 250 மில்லியன் டன் அளவுக்கு உணவு தானியம் உற்பத்தி செய்கிறது. சுமார் 250 மில்லியன் மக்கள் இரவு வேளை உணவு இல்லாமல் பட்டினியோடு படுக்கிறார்கள். உற்பத்தியாகும் உணவு தானியங்களில் ஏறத்தாழ 40% வீணாகி விடுகிறது.

## ஜெபக்குறிப்புகள்

1. ஆரோக்கியமான உணவு வாங்க முடியாமல் தவிக்கும் சுமார் 300 கோடி மக்களுக்கு ஆரோக்கியமான உணவு பொருட்கள் கிடைக்க ஜெபிப்போம்.

2. ஆண்டுதோறும் பல ஆயிரம் பேர் பட்டினியால் மரிக்கும் நிலை முற்றிலும் நம்தேசத்தை விட்டு ஒழிய ஜெபிப்போம்.

3. உணவுப் பொருட்களை வீணடிக்காமல் பாதுகாக்கவும், தேவையான உணவுப் பொருட்களை வாங்க வேண்டுமென்ற நல்ல எண்ணம் மக்கள் இருதயத்தில் உண்டாக ஜெபிப்போம்.

4. போதிய உணவில்லாமல் வாடும் சுமார் 82 கோடி மக்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்கப் பெற்று வாழ்ந்திருக்க ஜெபிப்போம்.

5 உணவுத் தானியங்கள் உற்பத்தி பெருகவும், அனைத்து மக்களுக்கு சரியான அளவு உணவுப் பொருட்களை ரேஷன் கடைகளில் கொடுக்க அரசு நல்ல திட்டங்களைக் கொண்டு வர ஜெபிப்போம்.

## சட்டமன்றப் பேரவை

- நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் 234 M.L.A.க்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளனர்.
- அதனடிப்படையில் புதிய அமைச்சரவை கர்த்தருடைய சித்தத்தின்படி நியமித்துள்ளார்.
- புதிய முதல்வராக பொறுப்பேற்றிருக்கும் மாண்புகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழகத் திற்கு நல்ல திட்டங்களை கொண்டு வந்து, அதன்மூலம் ஆசீர்வாதமான தமிழ்நாடாக திகழ வேண்டும்.
- M.L.A.க்கள் மக்களின் குறைகளை கேட் டறிந்து அதை நடைமுறைபடுத்து கிறவர் களாக இருக்க வேண்டும்.
- தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டங் களை நடைமுறைபடுத்தவும், தமிழகத்தை வளர்ச்சியின் பாதையில்கொண்டு செய்கிறவர் களாகவும் மாற வேண்டும்.

## ஜெபக்குறிப்புகள்

1.முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச் சரை தேவன் நல்ல முறையில் பயன்படுத் தப்படவும், தேவ ஞானம் அவர்களுக்குள் விளங்கவும் ஜெபிப்போம்.

2.M.L.A.க்கள் மேலும் தெய்வீக ஞானம் வெளிப்படவும், அவர்கள் சொன்ன திட்டங் களை நிறைவேற்றவும் ஜெபிப்போம்.

3.அமைச்சர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து செயல்படவும், தமிழ்நாட்டிற்கு நல்ல திட்டங்களை புதிய அரசாங்கம் கொண்டு வரவும் ஜெபிப்போம்.

4.தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டங்களை நிறைவேற்ற முதலமைச்சர் முன்வரவும், தமிழகத்திற்கு நல்ல வாழ்வாதாரங்களை உருவாக்க ஜெபிப்போம்.

5. மதுவில்லாத தமிழ்நாடாக மாறவும், ஆசீர் வாதமான தமிழ்நாடாக மாறவும் ஜெபிப்போம்.

தகவல்: ஜீலியட் கிளார்வின்






# சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்!

நாம் ஏன் ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும்; ஆத்தும ஆதாயம் செய்வதற்கான வழிமுறைகள் மற்றும் பல காரியங்களை கடந்த மாதங்களில் பார்த்துள்ளோம். நாம் நற்செய்தியை அறிவிக்கும் பொழுது பலர் கேள்விகளைக் கேட்டு நடைமுறை சிக்கல்களை உண்டாக்குகிறார்கள். இப்படிப்பட்ட சிக்கலான கேள்விகளுக்கு சரியான பதில் கொடுத்து ஊழியம் செய்வது எப்படி? என்பதனை இப்பகுதியில் காண்போம்.

## நான் பாவியல்ல!

நாம் ஆத்தும ஆதாயத்திற்காய் செல்லும்போது ஜனங்கள் நம்மைக் கண்டு பயப்படுவார்கள். ஏனென்றால், அவர்கள் பாவிகள் என்றும், பாவத்தை விட்டு மனந்திரும்ப வேண்டும் என்றும், நாம் பிரசங்கிப்போம் என்றும் அஞ்சுகிறார்கள். நாம் சுவிசேஷம் சொல்ல வாய்திறக்கும் முன்பாகவே, "நாங்கள் பாவிகளல்ல", அடுத்த தெருவிற்குச் செல்லுங்கள், நாங்கள் நல்லவர்கள், சிலருக்கு தருமங்கள் செய்கிறோம், எங்களுக்கு உங்களது நற்செய்தி தேவையில்லை என்பார்கள்.

**இப்படிப்பட்டவர்களுக்கு வேதம் கூறும் பதில் என்ன?**
**"எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானோம்" (ரோமர்3:23).** பாவம் என்பது ஆதாமின் மூலம் எல்லா மனிதருக்குள்ளும் வந்திருக்கிறது. ஆனால் பாவி என்பதோ ஒருவன் செய்கிற மீறுதல்களினிமித்தம் வருகிற சொல். எனவே மனிதனாய் பிறந்த எல்லாருமே பாவத்திலிருக்கிறோம். எனவே பாவம் செய்யாதவனும் பாவமுள்ளவனாக இருக்கிறான்.

## அது என்ன பாவம்?

**"அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தில் இருக்கிறார்கள்"**(யோவான் 16:9) இந்த வசனத்தின்படி, இயேசுவே மெய்யான தெய்வம்; என்னை இரட்சிக்கும்படி மனிதனாக பிறந்தார். என் பாவ மன்னிப்புக்காக அவர் இரத்தம் சிந்தினார்; மரித்து உயிர்த்தெழுந்தார்; இன்று அவர் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று விசுவாசியாமல் இருப்பதுதான் பாவம் என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

## என் பாவங்களை விட்டுவிட்டு பின்பு வருகிறேன்!

நாம் ஆத்தும ஆதாயத்திற்குச் செல்லும்போது நாம் சந்திக்கும் இன்னொரு வகைக்கூட்டம் 'என் பாவங்களை விட்டுவிட்ட பின்பு நான் இயேசுவிடம் வருகிறேன்' என்பார்கள்.

எங்கள் ஊரில் ஒரு தொழிலதிபரை அடிக்கடி சந்தித்து சுவிசேஷம் சொல்வதுண்டு. அவர் வேத வசனங்களைப் படிப்பார்; இயேசுவே தெய்வம் என்றும் விசுவாசிப்பார்; ஆனால் மனந்திரும்ப மாட்டார். ஒருமுறை அவரை ஆலய ஆராதனையில் கலந்துக் கொள்ள நான் அழைக்கும்போது அவர், "உங்கள் சபை பரிசுத்தமானது; நானோ என் வியாபாரத்திற்காக அனுதினமும் நூற்றுக்கணக்கான பொய்களை சொல்கிறேன்; இன்னும் சில ஆண்டுகளில் அதிகமான பணம் எனக்கு சேர்ந்துவிடும், அதன்பிறகு பொய்யை விட்டுவிட்டு உங்கள் ஆண்டவரிடம் வருகிறேன்" என்றார்.

**இப்படிப்பட்டவர்களுக்கு வேதம் கூறும் பதில் என்ன?**
**"...என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்" (சங்கீதம் 18:28).** இதற்கு நாம் கூறவேண்டிய பதில், "நீங்கள் உங்கள் பொய்யை விடமுடியாது. நீங்கள் கர்த்தரிடம் வாருங்கள் அப்பொழுது நீங்கள் சொல்லுகிற பொய் உங்களை விட்டு ஓடிவிடும்; ஏனென்றால் வெளிச்சம் வந்தால் இருள் தானாக நீங்கிவிடும்" என்பதே ●

இதுபோன்ற பல்வேறு நடைமுறை சிக்கல்களானக் கேள்விகளை எப்படி கையாளுவது? என்பதைக் குறித்து வரும் மாதங்களில் நாம் தொடர்ந்து பார்ப்போம்!



# நெகேமியா

## [பட்டணம் திரும்பவும் கட்டப்படுதல்]

### அறிமுகம்

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூத மக்களின் சரித்திரத்தை நெகேமியா புத்தகம் தொடருகிறது. பெர்சியா ராஜாவாகிய அர்தசஷ்டாவிடம் பானபாத்திரகாரனாக இருந்த நெகேமியா, தன் பதவியைக் கைவிட்டு, இஸ்ரவேலின் ஆளுநராக மாறி, பட்டணத்தின் மதில்களை சரிசெய்ய மக்களை வழிநடத்தினான். எஸ்றாவும், நெகேமியாவும் ஒரே காலத்தில் வாழ்ந்தனர். இருவருமே தேவனுடைய ஊழியக்காரர்கள். ஆனால் வித்தியாசமான விதங்களில் தேவனுக்கு ஊழியம் செய்தனர். பிணையக் கைதியாக இருந்த வருடங்களுக்கு பிறகு, தேவனுடைய மக்களின் சொந்த நிலத்திற்கு திரும்பி வந்ததில் தேவனுடைய கரம், அவர்கள் மேல் இருப்பதை தெளிவாக காட்டும்படி இப்புத்தகம் எழுதப்பட்டது.

### ஆசிரியர்

பெரும்பாலும் நெகேமியாவாக இருக்க வாய்ப்பு இருக்கிறது.

*அதிகாரங்கள்: 13*
*வசனங்கள்: 406*
*வார்த்தைகள்: 10,483*
*முக்கிய நபர்கள்: நெகேமியா, அர்தசஷ்டா சன்பல்லாத், எஸ்றா.*

### நெகேமியா சுருக்கம்

**மதில்களை திரும்பக் கட்டுதல்**

- மதில்களை திரும்பக் கட்ட தயாராகுதல் *(1,2 அதிகாரங்கள்)*
- திரும்பக் கட்டுதல் *(3-7 அதிகாரங்கள்)*

**மக்களை திரும்ப முன்னிருந்த நிலைக்குக் கொண்டு வருதல்:**

- உடன்படிக்கையைப் புதுப்பித்தல் *(8-10 அதிகாரங்கள்)*
- உடன்படிக்கைக்கு மக்களின் கீழ்ப்படிதல் *(11-13 அதிகாரங்கள்)*

### நெகேமியாவில் கிறிஸ்து

மக்களைத் திரும்ப பழைய நிலைக்குக் கொண்டு வர இயேசு தமது உயர்ந்த நிலையை விருப்பத்துடன் விட்டு விட்டதை நெகேமியா இயேசுவுக்கு மாதிரியாக இருந்து சித்தரிக்கிறான்.



# கிறிஸ்தவ கண்ணோட்டம்

கடந்த 5 மாதங்களாக, கிறிஸ்தவ கண்ணோட்டம் என்கிற தலைப்பில், கிறிஸ்தவம் எப்படி சத்தியத்தின் அடிப்படையில் அமைந்திருக்கிறது என்பதை 4 முக்கியமான கேள்விகளுக்கான பதில்களின் மூலமாக அறிந்து கொண்டோம். இக்கட்டுரையிலும் இனி அடுத்து வரும் சில கட்டுரைகளிலும், கிறிஸ்தவ வாலிப பிள்ளைகளாகிய உங்களை நோக்கி உங்கள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், வேலையிடங்களிலும் உங்கள் விசுவாசத்தின் உறுதியான நம்பிக்கையைக் குறித்து எழுப்பப்படும் சில முக்கியமான கேள்விகளையும் அதற்கான பதில்களையும் நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.

**“...உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்” (1பேதுரு 3:15)** என்று சொல்கிறது. ஒரு கிறிஸ்தவனாக நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் தார்மீக பொறுப்பு இது. மாத்திரமல்ல, பதில் தெரிந்தால் மட்டும் போதாது, அப்பதிலை எவ்விதமாக வழங்க வேண்டும் என்றும் இவ்வசனம் வலியுறுத்துகிறது.

நல்ல கிறிஸ்தவ குடும்பத்திலும், ஆவிக்குரிய சபையிலும் வளருகிற பல வாலிப பிள்ளைகள் அத்தகைய சூழலில் பக்தியோடு வாழ்ந்தாலும், கல்லூரி படிப்பிற்காகவோ, வேலைக்காகவோ வேறு சூழல்களுக்கு போகும்போது, அவர்களையும் அவர்களது நம்பிக்கையையும் நோக்கி வருகிறதான எதிர்மறையான கேள்விகளும், வாதங்களும் அவர்களுடைய விசுவாசத்தை நிலைகுலையச் செய்து விடுகிறது. தேவனாகிய கர்த்தர் மேல் இருக்கும் அவர்களது நம்பிக்கையையும் வலுவிழக்க செய்து விடுகிறது. பல வாலிபர்கள் அதனிமித்தம் பின்மாற்றத்தில் போய் விடுகிறார்கள். ஆகவே சில முக்கியமான கேள்விகளையும், அக்கேள்விகளுக்கு வேத சத்தியத்தின் அடிப்படையிலும் தர்க (Logic) அடிப்படையிலும் கொடுக்க வேண்டிய பதில்களையும் இக்கட்டுரையிலும், அடுத்து வரும் சில கட்டுரைகளிலும் நாம் ஆராய்வோம்.

## கடவுள் இருக்கிறாரா? (Does God exist?)

நாத்திகர்கள் (Atheists) பொதுவாக கொண்டிருக்கும் ஒரு கருத்து, கடவுள் இல்லை என்பது (God do not exist).



அதற்கான காரணங்களாக பொதுவாக அவர்கள் சொல்வது, உலகில் அநியாயம்/தீமை அதிகமான அளவில் காணப்படுகிறது, ஆகவே ஒரு நல்ல கடவுள் இருக்க சாத்தியமில்லை. கடவுள் இருந்தாலும் இல்லையென்றாலும் எனக்கு கவலையில்லை என்று சொல்பவர்கள் யதார்த்தவாதி (Agnostic) என்று அழைக்கப்படுகிறார்கள். நம்மில்கூட சில பேர், உலகில் காணப்படும் அநியாயங்களைக் காணும் போது, கடவுள் உண்மையாகவே இருக்கிறாரா என்கிற கேள்வி உள்ளத்தில் வந்து போகும். இன்னும் சொல்லப்போனால், பள்ளிப் பாடத்திட்டங்களில்கூட, பரிணாம வளர்ச்சியே (Evolution) கற்றுக் கொடுக்கப் படுகிறதே அன்றி சிருஷ்டிப்பின் (Creation) கோட்பாடுகள் அல்ல. பல வாலிப பிள்ளைகள் சிறு வயதிலிருந்தே இந்தப் பாடத்திட்டங்களைப் பயின்று வருவதால், குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்து

மனிதன் வந்தான் என்று நம்புகிறார்கள். எத்தனை வேதனையான காரியம் இது. நாம் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் என்று வேதம் சொல்கிறது.

சரி, இப்பொழுது கடவுள் இருக்கிறாரா? (Does God exist?) என்கிற கேள்விக்கான பதிலைப் பார்ப்போம். முதலில் கடவுள் இல்லை என்கிற வாதம் தர்க ரீதியின் அடிப்படையில் (Based on Logic) எடுபடாத அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு வாதம் (It is a self-defeating argument). முதல் காரணம், மனிதரில் எவராலும் முழு மறுப்பான வாதத்தை (Absolute Negative Statement) வழங்க முடியாது, நிரூபிக்கவும் முடியாது. உதாரணமாக, கருப்பு நிற மண் (Black Sand) உலகில் எங்கும் இல்லையென்று ஒருவர் சொல்ல வேண்டுமென்றால், மொத்த உலகத்தை அவர் ஒவ்வொரு அடிக்கூட விடாமல் சுற்றித்திரிந்தே அதை நிரூபிக்க முடியும். ஆனால் யாராலும் உலகத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் தங்களுடைய வாழ்நாளில் போய்விட முடியாது. ஆகவே கடவுள் இல்லை என்கிற வாதம் ஒரு யூகத்தின் அடிப்படையிலானதே தவிர ஆதாரங்களின் அடிப்படையிலானதல்ல (Therfore, "God does not exist" is a speculative statement and not a proven statement).

அடுத்ததாக, கடவுள் இருக்கிறார் என்பதற்கு சாதகமான 3 வாதங்களை கீழே விவரித்துள்ளேன். பல சாதகமான வாதங்கள் உண்டு. அவற்றிலிருந்து 3 முக்கியமான வாதங்களைத் தருகிறேன்.



**பிரபஞ்சத்தின் துல்லியமான வடிவமைப்பு** (Fine-Tuning of the Universe)

ஆம் நண்பர்களே, பூமியானது வாழ்வதற்கு ஏதுவான சூழலில் தொடர்ந்து இருப்பதற்கான ஒரு காரணம் பிரபஞ்சத்தின் விரிவாகுதலும், சுருங்குதலும் ஒரே சீராக இருப்பதால்தான். பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்கான சரியான தட்ப வெட்பம், பிராணவாயு, பயிர்கள் விளைவதற்கான சூழல் என எல்லாமே மிகத் துல்லியமாகவும், சீராகவும் அமைந்திருக்கிறது. இது தற்செயலாக அமைய சாத்தியமில்லை. ஆகவே பிரபஞ்சம் இப்படியாக வடிவமைக்கப்பட்டிருக்கிறதென்று நாம் புரிந்து கொள்ளலாம். வடிவமைப்பு என்று சொல்லும் போது வடிவமைத்தவர் ஒருவர் இருக்க வேண்டும். ஆகவே கடவுள் இருக்கிறார்.

**மனித உடலில் காணப்படும் தகவல்களின் திரட்சி** (Richness of information in the Human body)

நம்முடைய ஒரு மரபணுவிலிருந்து (DNA) ஆயிரம் பக்கங்கள் நிரம்பத்தக்க ஒரு புத்தகத்தை எழுதலாம். அந்த அரியத் தகவல்களை அதிலே வைத்தது யார்? தகவல்கள் இருக்கவேண்டுமென்றால் அதன் பின்பு சிந்தை இருக்க வேண்டும். சிந்தை இருக்க வேண்டுமானால், அது ஒரு மனிதராக இருக்க வேண்டும். ஆகவே கடவுள் இருக்கிறார்.

**தார்மீக கடமையின் உணர்வு** (Sense of moral duty)

நீங்கள் உங்கள் வேலைக்கு தாமதமாகி விட்டது என்று வேகமாக செல்லும் போது, சாலையில் ஒருவர் அடிபட்டு உயிருக்கு போராடுவதைப் பார்த்து, நீங்கள் நின்று வேலைக்கு செல்வதைப் பார்க்கிலும், அந்த உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்கிறதான அந்த தார்மீக கடமையுணர்வு எப்படி வருகிறது. அதன் அர்த்தம், ஒவ்வொரு உயிருக்கும் மதிப்பு இருக்கிறதென்பதாகும். அந்த மதிப்பு எப்படி வருகிறது. தானாக வர சாத்தியமில்லை ஒருவர் கொடுத்திருக்க வேண்டும். ஆகவே கடவுள் இருக்கிறார் ●





**அடுத்த மாதம் இன்னொரு கேள்வியுடன் வருகிறேன்.**




பகுதி: 8

# இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகுங்கள்!

இயேசுவின் வருகைக்கு முன்பாக அவர் சொன்ன அடையாளங்கள் இந்தப் பூமியில் எவ்வளவு துல்லியமாக நிறைவேறிக் கொண்டு வருகிறது என்பதை ஒவ்வொரு மாதமும் நீங்கள் தவறாமல் படித்து இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாகி வருகிறீர்கள். மேலும் உங்களில் அநேகர் அவரின் வருகைக்கு ஜனங்களை ஆயத்தப்படுத்தி வருகிறீர்கள். உங்கள் யாவருக்காகவும் தேவனைத் துதிக்கிறேன். இந்த மாதத்தில் இயேசுவின் வருகைக்கு முன்பாக நடக்கும் அடையாளங்களில் ஒன்றான பஞ்சத்தைக் குறித்து பார்ப்போம்.

பஞ்சம் என்பது போர், பணவீக்கம், மக்கள் தொகை ஏற்றத்தாழ்வு அல்லது அரசாங்க கொள்கைகள் போன்ற பல காரணங்களால் ஏற்படும் உணவுப் பற்றாக்குறை ஆகும். உலகில் இருக்கும் அனைத்து நாடுகளும் பஞ்ச காலத்தை சந்தித்து இருக்கிறது. இந்தியாவில் பஞ்சம் என்பது வாழ்க்கையின் தொடர்ச்சியான அம்சமாக இருக்கிறது.



19 மற்றும் 20ம் நூற்றாண்டுகளின் ஆரம்பத்தில் சுமார் 60 மில்லியன் பேர் பஞ்சத்தால் நம் தேசத்தில் இறந்துள்ளனர். இதுமட்டுமின்றி பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வெனிசுலா, தெற்கு சூடான், சிரியா, வட கிழக்கு நாடுகள், மேலும் பல நாடுகளில் பஞ்சத்தால் லட்சக்கணக்கான ஜனங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.



ஆப்ரிக்கா நாடுகள்தான் பஞ்சத்தால் அதிகளவு பாதிக்கப்படுகின்றன. கிழக்கு ஆப்பிரிக்காவின் சோமாலியாவில் 3.7 மில்லியன் பேர் உணவின்றி, குடிக்க நீரின்றி பஞ்சத்தால் வாடி வருவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. ஆப்பிரிக்கா கண்டத்தில் வருடத்திற்கு சுமார் ஒரு லட்சம் பேர் பட்டினியால் மடிகின்றனர். பட்டினி சாவுகள் உலகத்தின் பல பகுதிகளில் ஏற்பட்டு கொண்டு இருந்தாலும் நம் கண்கள் காண தற்போது பெருகி வரும் கொரோனாவால் வளர்ந்த நாடுகள் முதல் வளரும் நாடுகள் வரை உணவுப்பஞ்சம், பட்டினிகள் தலை விரித்தாடும் ஆபத்து ஏற்பட்டுள்ள உலகம் முழுவதும் போடப்பட்ட ஊரடங்கால் பல கோடி பேரின் வாழ்வாதாரம் பறிபோய் விட்டது. கொரோனாவால் உயிர் போகும் என்பதைவிட பட்டினியால் செத்துவிடுவோமோ என்ற பயம்தான்

மக்கள் பலரையும் வாட்டி வதைக்கிறது. சமீபத்தில் ஐ.நா. வெளியிட்ட அறிக்கையில் உலகளவில் 82 கோடி பேர் பசியால் வாடுகின்றனர் என்ற செய்தி இருதயத்தை உடைக்கிறது. இந்தியாவில் கடந்த ஏப்ரலில் மட்டும் 12.2 கோடி பேரின் வேலை பறிபோய் உள்ளது. இவை எல்லாவற்றையும் பார்த்து நீங்கள் பயந்து விட வேண்டாம். இயேசுவின் வருகைக்கு முன்பாக இவையெல்லாம் பூமியில் சம்பவிக்கும். இவைகளை தான் ஆண்டவர் யோவானுக்கு பத்மு தீவிலே வெளிப்படுத்தினார். "**நான் பார்த்தபோது, இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலை செய்யும் படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது" (வெளி. 6:8).**



எனக்கன்பான வாலிப தம்பி, தங்கையே! உங்களை சுற்றி பஞ்சம், பட்டினி, வறுமை, பயங்கரமான சம்பவங்கள் நடந்து கொண்டு இருந்தாலும் இவைகளைக் கண்டு நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை. "**இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்" (மத்.24:8).** உன்னதமானவரின் மறைவில் இருக்கிற உங்களுக்கு எந்தவொரு சேதாரமும் வராது. உன் பக்கத்தில் ஆயிரம் பேரும் உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது ஆதலால் கடைசி காலத்தில், "**...அவரை (ஆண்டவராகிய இயேசு கிறிஸ்வை) அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்" (சங்.2:12).** எனவே நீங்கள் ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தமாகி ஒவ்வொரு நிமிடமும் விழித்திருந்து ஜெபியுங்கள் ●

**இயேசுவின் வருகையை குறித்த இன்னொரு அடையாளத்தை அடுத்த இதழில் பார்ப்போம் தொடர்ந்து படியுங்கள், வருகைக்கு ஆயத்தப்படுங்கள்!**




**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம் 119:105).**

**எழும்பிப் பிரகாசி, உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. (ஏசாயா 60:1).**

**இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார் (யோவான் 8:12)**

**உம்முடை வசனத்ததின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும். (சங்கீதம் 119:130).**

**உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார். உன் நீதியை வெளிச்சத்தைப்போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார். (சங்கீதம் 37: 5,6).**

**அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர், இருளில் இருக்கிறதை அவர் அறிவார். வெளிச்சம் அவரிடத்தில் தங்கும். (தானியேல் 2:22).**

# செய்திகள்!

*கொரோனாவிலிருந்து மீண்டாலும் முடியாத சோதனை*

## மிரட்டும் மியூகோர்மைகோசிஸ்!

**மகாராஷ்டிராவில் 2000 பேருக்கு பாதிப்பு**

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட மாநிலம் மகாராஷ்டிரா. அங்கு மியூகோர்மைகோசிஸ் பாதிப்பால் 2000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கிடையே தானே மாவட்டத்தில் 2 பேர் நேற்று மியூகோர்மைகோசிஸ் சிகிச்சை பலனின்றி பலியாகி உள்ளனர். இதனால் கர்நாடகா உள்ளிட்ட பல் வேறு மாநில அரசுகள் இந்தப் பாதிப்பை தீவிரமாக காண்காணித்து வருகின்றன. கொரோனாவிடமிருந்து போராடி மீண்டாலும் சிலருக்கு சோதனை முடிவதில்லை. பலவீனமானவர்களை தாக்கும் மியூ கோர்மை கோசிஸ் எனும் 'கறுப்பு பூஞ்சை' கண்களை பறிக்கிறது, சிலரின் உயிரையும் எடுத்து விடுகிறது. மிகக் கொடிய இந்தப் பாதிப்பு இந்தியாவில் கொரோனாவுடன் சேர்ந்து மெல்ல மெல்ல வேகமெடுக்கத் தொடங்கி உள்ளது. உலகிலேயே இந்தியாவில் தான் கொரோனா 2வது அலை மிகக் கொடூரமாக இருந்து வருகிறது. பல குடும்பங்களை அனாதையாக்கி வரும் இந்தக் கொடூர வைரசிடமிருந்து பலரும் போராடியே விடுபடுகின்றனர். கொரோனாவிலிருந்து மீண்டாலும் நுரையீரல் பாதிப்பு, மூச்சு திணறல் என பிற நீண்ட கால பாதிப்புகள் பலருக்கு ஏற்படுகிறது. அந்த வரிசையில் மிக பயங்கரமான துணை பாதிப்பாக மியூ கோர்மைகோசிஸ் எனப்படும் கறுப்பு பூஞ்சை பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.



**மியூகோர்மைகோசிஸ் என்றால் என்ன?**

மியூகோர்மைகோசிஸ் என்பது மிகவும் அரிதான தொற்று. மண், தாவரங்கள், உரம் மற்றும் அழுகும் பழங்கள் மற்றும் காய்கறிகளில் பொதுவாகக் காணப்படும் பூஞ்சையால் இது உருவாகிறது. எல்லோரது உடலுக்குள்ளும் இவை சென்றாலும் அவை தொற்றை ஏற்படுத்துவதில்லை. காரணம் உடலில் இருக்கும் எதிர்ப்பு ஆற்றல். நமது உடலில் எதிர்ப்பு சக்தி குறையும் போது பூஞ்சைகள் நம்மைத் தாக்குகின்றன. வேறு நோய்க்காக மருந்துகளை எடுத்துக் கொண்டிருக்கும் போது பூஞ்சைகளை எதிர்த்துப் போராடும் ஆற்றல் உடலுக்குக் குறைகிறது. அந்த நேரத்தில் பூஞ்சைத் தொற்று ஏற்படுகிறது. காற்றில் உள்ள பூஞ்சைத் துகள்களை எதிர்ப்பு ஆற்றல் குறைந்த மனிதர்கள் சுவாசிக்கும்போது அவை உடலுக்குள் புகுந்து சைனஸ் மற்றும் நுரையீரலைப் பாதிக்கிறது. கவனிக்காமல் விட்டால் மரணத்தை ஏற்படுத்தும் ஆபத்தைக் கொண்டது இந்தப் பாதிப்பு. கொரோனாவால் மிகத் தீவிரமாக பாதிக்கப்பட்டு ஐசியூவில் சிகிச்சை பெறுவர்களுக்கு ஸ்டீராய்டு எனும் அதிக சக்தி வாய்ந்த மருந்துகள் செலுத்தப்படுகின்றன. இதனால் கொரோனாவிலிருந்து வெளியே வருகின்றனர். ஆனால் அதன் பின்னர் இரு வாரங்களில் அவர்கள் கருப்பு பூஞ்சை எனும் மியூகோர்மைகோசிஸ் எனும் நோயால் பாதிக்கப்படுகின்றனர். உடலில் சர்க்கரை அளவை இந்தப் பூஞ்சை அதிகரிப்பதாகவும் இதனால் பாதிக்கப்பட்டவர்களில் இரண்டில் ஒருவர் உயிரிழப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். மூக்குப் பகுதியில் ஏற்படும் இந்த நோய், விரைவிலேயே தொண்டை, கண்கள், மூளை எனப் பரவி விடும். இதனால் பலருக்கு கண்களை அறுவை சிகிச்சை செய்து அகற்ற வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்தத் தொற்று மூளையை எட்டும் நிலையில் உயிருக்கு ஆபத்தான நோயாக மாறிவிடுகிறது.

**அறிகுறிகள் என்னென்ன?**

ஆரம்ப கட்டத்தில் கன்னம், கண் பகுதிகளில் வலி ஏற்படும், மூக்கிலிருந்து ரத்தம் ஏற்படும் அப்போதே மருத்துவரை அணுகி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். மேலும், பல் வலி, காட்சிகள் மங்கலாகவும் இரட்டையாவும் தெரிவது, காய்ச்சல் போன்றவை ஏற்படும். இவை தவிர மார்பு வலி, மூச்சு விடுவதில் சிரமம் உள்ளிட்டவையும் மியூகோர்மைசிஸ் அறிகுறிகளாகும்.

– தினகரன் 13, மே 2021

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

டிப்ஸ்: ரெபேக்கா



# கண்களை பாதுகாத்துக் கொள்ள...

**கண் பார்வை குறைபாடு என்பது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்படும். சத்து நிறைந்த உணவுகளை தவிர்த்து கொழுப்பு உணவுகளை உண்பதே இதற்கு காரணம். இதனால் சிறுவயதிலேயே கண்ணாடி அணிய வேண்டிய சூழ்நிலை உருவாகி விடுகின்றது.**

## கண் பார்வையை பாதுகாக்க ...

✔ பெரும்பாலும் கணினி பயன்படுத்துபவர்கள் கண்களை தொடர்ந்து இமைப்பது இல்லை. மேலும் அவர்கள் கண்களை சீரான முறையில் இமைத்து வந்தாலே நல்ல புத்துணர்ச்சி ஏற்படும்.

✔ வெளிச்சம் குறைந்த இடங்களில் படிப்பது மற்றும் மற்ற செயல்கள் செய்வதை தவிருங்கள். குறைந்த வெளிச்சத்தில் கண்களுக்கு வேலை கொடுப்பது நல்லதல்ல.

✔ படபடப்பு, மன உளைச்சல், சோகம், கோபம், கவலை ஆகியவை கண்ணையும் பதம் பார்க்கக் கூடியவை. எனவே இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

✔ கண்களில் அதிக அழுத்தமோ எரிச்சலோ உணர்ந்தால் உடனே நன்கு தண்ணீர் ஊற்றி கண்களை நன்கு கழுவுங்கள்.

✔ கேரட், பப்பாளி, மாம்பழம், கீரைகள், ஆரஞ்சு, மீன், முட்டை, புரோகோலி, தக்காளி, அடர்பச்சை நிறக் காய்கறிகள், ஆளி விதைகள், வெள்ளரி, பாதாம், வால்நட் ஆகியவை பார்வைத் திறனை மேம்படுத்தும் உணவுகள்.

✔ தினமும் சராசரியாக 7 முதல் 8 மணி நேரம் ஆழ்ந்து உறங்க வேண்டும். இல்லையென்றால் கண் பார்வை பாதிக்கப்படும்.

✔ வெயிலில் அதிக நேரம் நின்றிருந்த பிறகு உடனே கண்களைக் கழுவக் கூடாது.

✔ இரவு தூங்குவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்னால் இருந்து டிவி, கணினி, செல்போன் போன்றவற்றை பார்ப்பதை தவிருங்கள்.

✔ ஒரு ரப்பர் பந்தை எடுத்து அதனை சுவற்றில் எறிந்து அந்த பந்து செல்லும் திசைகளிலெல்லாம் உங்கள் பார்வையை திருப்புங்கள். இது கண்ணுக்கான சிறந்த பயிற்சி.



✔ அதிகரித்து வரும் தூசிகளால் கண்கள் அதிகம் பாதிக்கப்படுகிறது. எனவே வெளியில் சென்று வந்தவுடன், சுத்தமான நீரினால் கண்களை கழுவுங்கள்.

✔ கண்ணுக்கு அதிகம் வேலை கொடுக்கும் சமயங்களில், ஒவ்வொரு மணி நேரத்திற்கும், இடையில், ஐந்து நிமிடம், உள்ளங்கையால், இரு கண்ணையும் மூடியபடி அமர்ந்து, கண்ணுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும் ●

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25-05-2021.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.




